# நேர்மையே எங்களை இயக்குகிறது

## நன்னடத்தைக் கோட்பாடுகள்



CooperStandard

# எங்களுடைய தலைமைச் செயல் அலுவலரின் கடிதம்



எங்களுடைய பகிர்ந்தளிக்கப்பட்ட மதிப்பீடுகளே நாங்கள் யார் என்பதைத் தீர்மானிக்கிறது மற்றும் இவ்வாறே நாங்கள் அவற்றைக் கடைபிடிக்கிறோம்:

- இந்த நன்னடத்தைக் கோட்பாட்டை நீங்கள் புரிந்துகொண்டு பின்பற்ற வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.
- நீங்கள் செய்யும் அனைத்து காரியங்களிலும் நெறிமுறையான விருப்பத்தேர்வுகளை மேற்கொள்ள வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம்.
- நேர்மைக்காக நீங்கள் குரல் கொடுக்க வேண்டும் எனவும், நன்னடத்தைக் கோட்பாட்டை மீறும் அல்லது மீறுவதாகத் தோன்றும் எந்த ஒரு காரியம் குறித்தும் நீங்கள் அறிக்கை அளிக்க வேண்டும் எனவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம்.
- உங்களுடைய அறிக்கைகளையும், கேள்விகளையும் நாங்கள் மிகுந்த கவனத்துடன் எடுத்துக்கொள்வோம்.
- நன்னடத்தைக் கோட்பாட்டை மீறுவதாகத் தோன்றும் நடத்தை குறித்த கவலைகளைத் தெரிவிப்பவருக்கு அல்லது அறிக்கைகள் அளிப்பவருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்த ஒரு பழிவாங்கும் நடவடிக்கையையும் நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம்.
- வணிகத்தை நேர்மையுடன் நடத்துதல் உட்பட நாங்கள் மேற்கொள்ளும் அனைத்து காரியங்களிலும் உலகத்தரம் இருக்க வேண்டும் என நாங்கள் முயற்சி செய்கிறோம்.

கலாச்சாரம், புத்தாக்கம் மற்றும் முடிவுகள் வழியாக மதிப்பீடுகளை இயக்கும் எங்களுடைய நோக்கமானது நாங்கள் எதை அடையவிரும்புகிறோம் என்பதை எடுத்துரைக்கிறது, ஆனால் எங்களுடைய மதிப்பீடுகளே நாங்கள் எப்படி நடந்துகொள்கிறோம் என்பதை எடுத்துரைக்கிறது. நாங்கள் எங்கள் இதயத்திற்கு நெருக்கமாக மற்றும் அன்பாக வைத்திருக்கும் ஆறு மதிப்பீடுகள் இங்கு உள்ளன. இவை சுவரில் தொங்கிக்கொண்டிருக்கும் வார்த்தைகளுக்கும் மேலானவை ஆகும். கூப்பர் ஸ்டாண்டர்ட் சார்பாக நாங்கள் எப்படி எங்களை வழிநடத்துகிறோம் என்பதை இவை எடுத்துரைக்கின்றன.

எங்களுடைய அனைத்து மதிப்பீடுகளும் முக்கியமானவை ஆகும், ஆனால் இதில் நேர்மையே மற்ற அனைத்தை காட்டிலும் முக்கியமானதாக இருக்கிறது. இதன் காரணமாகவே நம்முடைய நடத்தையை வழிநடத்திட உதவும் பொருட்டு எங்களுக்கு ஒரு நன்னடத்தைக் கோட்பாடு உள்ளது. இந்தக் கோட்பாட்டின் காரணமாகவே நாங்கள் தொடர்ந்து ஒரு பொறுப்பான மற்றும் நேர்மையான வழியில் செயல்படுகிறோம். நேர்மையை நிலைநிறுத்தும் செயலின் ஒரு பகுதியாக, எங்களது நன்னடத்தைக் கோட்பாட்டுடன் ஒத்துப்போகாத ஒரு நடத்தையை நாம் பார்க்கும் போது அது குறித்து பேசவும் நாம் தயாராக இருக்க வேண்டும். நிறுவனத்தின் நன்னடத்தைக் கோட்பாட்டை அனைத்து ஊழியர்களும் வாசித்து, அதை தீவிர கவனத்துடன் கடைபிடிக்க வேண்டும் என நான் அவர்களை ஊக்குவிக்கிறேன், ஏனென்றால் இது நம்முடைய நிறுவனம் வெற்றிகரமானதாகவும், நீடித்து நிலைத்திருக்கும் நிறுவனமாகவும் இருப்பதை உறுதி செய்யும்.

எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாட்டை முறையாகப் பயன்படுத்தும் போது அது உங்களுக்கும், உங்கள் குடும்பத்திற்கும் மற்றும் கூப்பர் ஸ்டாண்டர்ட்-ன் அனைத்துப் பங்குதாரர்களுக்கும் பலனளிக்கும். பணியிலும், சந்தையிலும் நம்முடைய பணியை நேர்மையுடனும், சட்டப்படியாகவும் மேற்கொள்வதை உறுதி செய்வதற்குத் தேவையான வழிகாட்டுதலை இது நமக்கு அளிக்கிறது.

எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடு குறித்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருந்தாலோ அல்லது அது தொடர்பான ஏதேனும் விதிமீறல்களை நீங்கள் அறிந்தாலோ உங்களுடைய மேற்பார்வையாளர்/மேலாளர், மனிதவளக்குழுவின் ஓர் உறுப்பினர், சட்டத்துறை, நெறிமுறை மற்றும் அதைக் கடைபிடித்தலுக்கான அலுவலகம் அல்லது உலகளாவிய நெறிமுறை மற்றும் அதைக் கடைபிடித்தலுக்கான குழுவின் ஏதேனும் ஓர் உறுப்பினர் உள்ளிட்ட நிறுவனத்தின் ஏதேனும் ஓர் அறிக்கை அளிக்கும் ஆதார அமைப்புடன் உடனடியாக நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டும். அடையாளமின்றி அறிக்கை அளிக்கவிரும்பும் பட்சத்தில்*, அவ்வாறு அறிக்கை அளிப்பதற்கான கூப்பர் ஸ்டாண்டர்ட் இண்டக்ரிட்டிலைன் www.CSIntegrityLine.comஎன்ற இணையதளத்தில் கிடைக்கப்பெறுகிறது. இந்த அறிக்கை அளிப்பதற்கான ஆதார அமைப்புகள் குறித்த கூடுதல் தகவல்கள் பக்கம் 8-ல் கிடைக்கப்பெறுகின்றன.

கேள்விகள் கேட்பதற்காகவோ அல்லது நன்னடத்தைக் கோட்பாடு குறித்த ஏதேனும் பிரச்சினைகளைத் தெரிவிப்பதற்காகவோ அல்லது கோட்பாட்டின் சந்தேகத்திற்கிடமான விதிமீறல்கள் குறித்து அறிக்கை அளிப்பதற்காகவோ உங்கள் மீது எந்த விதமான பதில் நடவடிக்கையும் அல்லது பழிவாங்கும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்படமாட்டாது என்ற உறுதிமொழி அளிக்கப்படுகிறது.

எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாட்டை நீங்கள் வாசிக்கவும், தேவைப்படும் போது வழிகாட்டுதலுக்காக அதைப் பார்வையிடவும் நான் உங்களை ஊக்குவிக்கிறேன். நாம் ஒவ்வொருவரும் தனிநபர்களாகவும், ஒன்றிணைந்த ஒரு நிறுவனமாகவும் எப்படி செயல்படுகிறோம் என்பதன் அடிப்படையிலே நமக்கான சிறப்பு மிக்க நற்பெயர் உள்ளது.

தங்கள் உண்மையுள்ள,
**ஜெப்ஃரி எஸ். எட்வர்ட்ஸ்**
**தலைவர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர்**

# உள்ளடக்க அட்டவணை

நேர்மையே எங்களை இயக்குகிறது ....4
நேர்மைக்காக குரல் கொடுக்கவும்....5
நேர்மையுடன் விருப்பத்தேர்வுகளை மேற்கொள்ளவும்....6
நீங்கள் எப்போது பேசவேண்டும்?....7
நீங்கள் குரல் கொடுக்கும் போது எதை எதிர்பார்க்கிறீர்கள்?..7
நெறிமுறை தொடர்பான அறிக்கை அளிக்கும் ஆதார அமைப்புகள்....7
கூப்பர் ஸ்டாண்டர்ட் இண்டக்ரிட்டி லைன் ....8
திறந்த கதவுக் கொள்கை ....9
பழிவாங்குதல்: மோசடி என்றால் என்ன?....9
பழிவாங்குதல் இல்லா கொள்கை ....9
எங்களுடைய பணியிடத்தில் நேர்மையே எங்களை இயக்குகிறது....10
பரஸ்பர மரியாதை....11
பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்குதல் ....12
பாதுகாப்பான பணியிடம் ....12
நிதிசார்ந்த பதிவுகள் மற்றும் அறிக்கைகள் ....14
நியாயமான ஊதியங்கள்....15
பதிவுகள் மேலாண்மை....15
சொத்துக்களைப் பாதுகாத்தல் ....15
தகவல் அமைப்புகள் ....16
நலன் சார்ந்த முரண்பாடுகள் ....16
இரகசியமான தகவல்....18
அறிவுசார் சொத்து....19
சந்தையில் நேர்மையே எங்களை இயக்குகிறது ....20
சந்தைப்படுத்துதலுக்கான பொருட்கள்21
தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு....21
கவனமான தகவல் தொடர்பு 22
சமூக ஊடகம் ....23
தயாரிப்புப் பொருளின் தரம்....24
வணிகப் நம்பிக்கையின்மை மற்றும் நியாயமான போட்டி..25
பணிக்கொடைகள் மற்றும் கேளிக்கை 26
லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு ....27
வர்த்தக கட்டுப்பாடுகள் ....29
உள்வணிகம் ....30
உலகளாவிய சமூகத்தில் நேர்மையே எங்களை இயக்குகிறது....31
நற்பணி நன்கொடைகள்....32
நமது சுற்றுப்புறங்களைப் பராமரித்தல் ....32
கட்டாயமாக வேலைவாங்குதல் மற்றும் நவீன அடிமைத்தனம் ....33
அரசியல் பங்கேற்பு....33
நேர்மையே எங்களை முன்னோக்கி இயக்குகிறது....34
நெறிமுறை தொடர்பான அறிக்கை அளிக்கும் ஆதார அமைப்புகள்....35
எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாட்டைக் கடைபிடித்தல் ....35

*எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடு முழுவதும் எடுத்துரைக்கப்பட்டுள்ள தலைப்புகள் தொடர்பான மேலும் குறிப்பிட்ட கொள்கைகளுக்கு, சட்டம், கடைபிடித்தல், நிதி, மனிதவளம், தரம் மற்றும் உடல்நலம், பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் ஆகியவை தொடர்பான கொள்கைப் பக்கங்களை உள்ளடக்கிய கூப்பர் ஸ்டாண்டர்ட்-ன் இயக்க முறைமைக்கான இணையதளத்தைப் (CSOS) பார்வையிடவும். இவையனைத்தையும் ஊழியருக்கான வலைவாசலில் (employee portal) உள்ள CSOS-ன் முகப்புப் பக்கத்திலிருந்து நீங்கள் அணுகமுடியும்.*

# நேர்மையே எங்களை இயக்குகிறது

கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் நாங்கள் கலாச்சாரம், புத்தாக்கம் மற்றும் முடிவுகள் வழியாக மதிப்பீடுகளை இயக்குகிறோம். நாங்கள் செய்யும் அனைத்து காரியங்களிலும் உலகத்தரம் இருக்க வேண்டும் என நாங்கள் முயற்சி செய்கிறோம் மற்றும் எங்களுடைய முக்கிய மதிப்பீடான நேர்மையானது எங்களை தனித்துவப்படுத்துகிறது. கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் நேர்மையுடன் செயலாற்றுவது என்பதன் அர்த்தம் என்ன என்பதை எங்களுடைய நன்னடத்தை கோட்பாடு வரையறுக்கிறது மற்றும் இது நம்முடைய நிறுவனத்தின் கொள்கைகள் குறித்தும் மற்றும் உதவிக்காக எங்கு செல்ல வேண்டும் என்பது குறித்தும் வழிகாட்டுதல்களை அளிக்கிறது. நாம் பின்பற்ற வேண்டிய அனைத்து சட்டங்களையும் அல்லது நாம் சந்திக்கப் போகும் அனைத்து விருப்பத் தேர்வுகளையும் ஓர் ஆவணத்தில் உள்ளடக்க இயலாது என்ற போதிலும், வணிகம் சார்ந்த முடிவுகள் எளிதானதாகவோ அல்லது வெளிப்படையானதாகவோ இல்லாத பட்சத்தில் அந்த மாதிரியான சூழ்நிலைகளைக் கடந்து செல்வதற்கான ஒரு செயல்திட்டத்தை இது அளிக்கிறது.

## நேர்மையே எங்களை பின்வருமாறு வைத்திருக்கிறது...

### நியாயமானவர்கள்.

நாங்கள் மேற்கொள்ளும் அனைத்துப் பணிகளிலும் நாங்கள் உண்மையானவர்களாகவும், நம்பிக்கையானவர்களாகவும், வெளிப்படையானவர்களாகவும் உள்ளோம்.

### நெறிமுறையானவர்கள்.

நாங்கள் நியாயமாக வணிகத்தை மேற்கொண்டு வருகிறோம், சட்டங்களைப் பின்பற்றி நடக்கிறோம் மற்றும் நாங்களும் எங்களுடைய குழு உறுப்பினர்களும் உயர்ந்த தரத்திலான நெறிமுறையைக் கடைபிடிக்கிறோம்.

### பொறுப்புள்ளவர்கள்.

நெறிமுறையான நடவடிக்கைகள் மூலம் எங்களுடைய வணிகத்திற்கும், சமூகத்திற்கும் நல்ல விஷயங்களை அளிப்பதற்கான எங்கள் பொறுப்புணர்வாலும், எங்களுடைய மதிப்பீடுகளை பிரதிபலிக்காத நடவடிக்கைகளைக் காணும்போது அது குறித்து பேசும் எங்கள் பொறுப்புணர்வாலும் நாங்கள் இயக்கப்படுகிறோம்.

## நேர்மையே நம் அனைவரையும் இயக்க வேண்டும்

கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் பணியாற்றும் அனைவரும் நன்னடத்தைக் கோட்பாட்டை புரிந்துகொண்டு அதை பின்பற்றும் பொறுப்பையும், மேலும் அதிகமான வழிகாட்டுதல் தேவைப்படும் போது அது குறித்து கேள்விகள் கேட்கும் பொறுப்பையும் கொண்டவர்களாவார்கள். இதில் பகுதி நேர, தற்காலிக மற்றும் ஒப்பந்த பணியாளர்கள் உட்பட உலகெங்கிலும் உள்ள இயக்குநர்கள், அலுவலர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளடங்குவார்கள்.

நாட்டுக்கு நாடு மற்றும் கலாச்சாரத்திற்கு கலாச்சாரம் வணிக நடைமுறைகள் சில வழிகளில் வேறுபடக்கூடும், ஆனால் எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாட்டின் தரநிலைகள் நாங்கள் வணிகம் செய்ய அனைத்து இடங்களுக்கும் உலக அளவில் பொருந்தக்கூடியதாகும்.

கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் வணிக நெறிமுறை மற்றும் நேர்மைக்கான எங்களுடைய பொறுப்புடைமையையும், எங்களுடைய நெறிமுறைகள் மற்றும் அதைக் கடைபிடிக்கும் பொறுப்புகளையும் சுருக்கமாக விவரிக்கும் எங்களுடைய வழங்குநருக்கான நன்னடத்தைக் கோட்பாட்டை எங்களுடைய வழங்குநர்களும் கடைபிடிக்க வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். வழங்குநருக்கான நன்னடத்தைக் கோட்பாடு www.cooperstandard.com/public-data என்ற நிறுவனத்தின் இணைய தளத்தில் காணப்படும் பங்குதாரர்களுக்கான பக்கத்தில் கிடைக்கப்பெறுகிறது.

## நேர்மையை நாங்கள் தீவிர கவனத்துடன் எடுத்துக்கொள்கிறோம்.

இந்த நன்னடத்தைக் கோட்பாடில் வரையறுக்கப்பட்டுள்ள எதிர்பார்ப்புகளை கூப்பர் ஸ்டாண்டர்ட் தீவிர கவனத்துடன் எடுத்துக்கொள்கிறது இந்த நன்னடத்தைக் கோட்பாட்டின் தரநிலைகளைப் பூர்த்தி செய்யாத நடத்தையானது அல்லது எங்களுடைய கொள்கைகளை மீறும் வகையில் அமைந்த நடத்தையானது பணிநீக்கம் உட்பட ஒழுங்குநடவடிக்கைக்கு வழிவகுக்கக்கூடும்.

# நேர்மைக்காக குரல்கொடுங்கள்

கேள்விகள் கேட்கவும், பிரச்சினைகளைத் தெரிவிக்கவும் ஊழியர்கள் குரல் கொடுக்க வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் நெறிமுறை தவறிய நடத்தை ஒரு போதும் நிகழாது என நாங்கள் நம்புகிறோம், ஆனால் அவ்வாறு நிகழும் பட்சத்தில் அது குறித்து நாங்கள் அவசியம் அறிந்துகொள்ள வேண்டும், அதன் மூலம் அதற்கான தீர்வை அளிக்க எங்களால் பணியாற்ற முடியும். தவறான நடத்தையை அடையாளம் காண நாங்கள் எங்களுடைய அனைத்து குழு உறுப்பினர்களையும் நம்பியிருக்கிறோம் மற்றும் அவர்கள் இந்தக் கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறை தொடர்பான அறிக்கை அளிக்கும் ஓர் ஆதார அமைப்பின் மூலம் அதைத் தெரிவிக்க வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். நன்னடத்தைக் கோட்பாட்டின் விதிமீறல்கள் குறித்து நாங்கள் எவ்வளவு சீக்கிரம் அறிந்துகொள்கிறோமோ அவ்வளவு சீக்கிரமாக அவற்றை எங்களால் முடிவுக்கு கொண்டு வரமுடியும் மற்றும் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் அவற்றிற்கானத் தீர்வுகளை அளிப்பதற்காக எங்களால் பணியாற்றவும் முடியும்.



# நேர்மையுடன் விருப்பத்தேர்வுகளை அமைத்துக்கொள்ளுதல்

ஒவ்வொரு நாளும் நாம் எப்படி வணிகம் செய்கிறோம் என்பதை நேர்மையே முடிவுசெய்ய வேண்டும். எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடானது நீங்கள் சந்திக்கக்கூடும் மிகவும் பொதுவான சட்டம் மற்றும் நெறிமுறை சார்ந்த கேள்விகளுக்குப் பதில் அளிக்கிறது, மற்றும் இதனால் அனைத்து சூழ்நிலைகளுக்கும் பதிலளிக்க முடியாது. நீங்கள் ஒரு நெறிமுறை சார்ந்த குழப்பத்தைச் சந்திக்கும் போது, பின்வரும் கேள்விகளை உங்களிடமே கேட்டுக்கொள்ளவும்:

### இந்த விருப்பத் தேர்வு உங்களுக்கு சரியானதாக தோன்றுகிறதா?

உங்களுடைய நெஞ்சுரத்தின் மீது நம்பிக்கை வைக்கவும். உங்களுக்கு ஏதாவது ஒன்று சரியற்றதாகத் தோன்றினால், ஒரு முடிவை எடுப்பதற்கு முன்பாகவோ அல்லது நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன்பாகவோ அது குறித்து பேசுவது மற்றும் வழிகாட்டுதலைத் தேடுதல் போன்ற ஒன்றைச் செய்ய வேண்டிய பொறுப்பு உங்களைச் சார்ந்தது ஆகும்.

### நிறுவனத்திற்கும், என்னுடைய குழுவுக்கும் இது ஒரு மிகச்சிறந்த விருப்பத்தேர்வாக இருக்குமா?

நாம் ஒருவருக்கொருவர் பொறுப்புள்ளவராக இருக்கிறோம் மற்றும் நம்முடைய தனிப்பட்ட விருப்பங்களுக்கு முன்பாக நிறுவனத்தின் விருப்பங்களை நிறைவேற்றுகிறோம்.

### இந்த விருப்பத்தேர்வு நமது நிறுவனத்தின் அனைத்து மதிப்பீடுகளுக்கும் பொருந்துகிறதா?

ஒரு நிறுவனமாக நாம் யார் என்பதை நம்முடைய மதிப்பீடுகள் வரையறுக்கின்றன.

### இந்த விருப்பத் தேர்வு மற்ற யாரவது ஒருவருக்கு சரியானதாக தோன்றுகிறதா?

நாம் சரியான காரியங்களைச் செய்வது மட்டுமல்லாமல், தவறான காரியங்கள் என தோன்றக்கூடியவற்றையும் தவிர்க்கிறோம்.

### இந்த விருப்பத்தேர்வு சட்டத்தின் நோக்கத்தையும், அதன் இலக்கிய விளக்கத்தையும் பின்பற்றுகிறதா?

நாம் சட்டத்தை மட்டும் கடைப்பிடிப்பதில்லை, சரியான காரியத்தைச் செய்யும் பொருட்டு நாம் சட்டத்திற்கு மேலேயும், சட்டத்திற்கு அப்பாற்பட்டும் செல்கிறோம்.

### இந்த முடிவை எடுக்க எனக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா?

நிறுவனத்தின் சார்பாக பொறுப்புகளை ஏற்பதற்கு முன்பாக நாம் வழிகாட்டுதலையும், அனுமதியையும் நாடுகிறோம். அடிக்கடி, முடிவு எடுக்க நீங்கள் சிரமப்படும்போது அம்முடிவை எடுக்க மிகவும் மூத்த ஊழியரிடமிருந்து ஓர் அனுமதி உங்களுக்குத் தேவைப்படக்கூடும். உங்களுக்கு நிச்சயமில்லாத பட்சத்தில், வழிகாட்டுதலைக் கேட்டுப் பெறவும்.

உறுதியாக இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்க இயலவில்லை எனில், நீங்கள் நெறிமுறை தொடர்பான அறிக்கை அளிக்கும் ஆதார அமைப்புகளில் ஒன்றுடன் பேசி வழிகாட்டுதலைப் பெறவும்.

## நீங்கள் எப்போது பேசவேண்டும்?

ஏதேனும் சரியற்றதாக தோன்றினால், அந்தப் பிரச்சினையைத் தீர்க்க நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மற்றும் அதை கூப்பர் ஸ்டாண்டர்ட்-க்குத் தெரிவிக்க வேண்டும் எனவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாட்டின் சந்தேகத்திற்கிடமான அல்லது உண்மையான எந்த ஒரு விதிமீறல் குறித்தும் நீங்கள் நிறுவனத்தின் நெறிமுறை தொடர்பாக அறிக்கை அளிக்கும் ஆதார அமைப்புகளுக்குத் தெரிவிக்க வேண்டும்.

### நெறிமுறை தொடர்பான அறிக்கை அளிக்கும் ஓர் ஆதார அமைப்புக்கு தெரிவிக்கப்பட வேண்டிய பிரச்சினைகளுக்கான உதாரணங்கள்:

- தொல்லை கொடுத்தல் அல்லது எளியவர்களைக் கொடுமைப்படுத்துதல்;
- லஞ்சம் அல்லது கையூட்டுத் திட்டங்கள்;
- பொருத்தமற்ற பரிசுகள் அல்லது பணிக்கொடைகள்;
- கேள்விக்குரிய கணக்கியல் சார்ந்த அல்லது தணிக்கை சார்ந்த விஷயங்கள்;
- நலன் சார்ந்த முரண்பாடுகள்;
- தயாரிப்புப் பொருளின் தரம் சார்ந்த பிரச்சினைகள்;
- ஒழுங்குமுறை விதிமீறல்கள்;
- உள் வணிகம்;
- இரகசியமான தகவல்களை வெளிப்படுத்துதல்;
- சுற்றுச்சூழல், உடல்நலம் அல்லது பாதுகாப்பு தொடர்பான பிரச்சினைகள்
- திருட்டு;
- நிதி சார்ந்த தவறான செயல்பாடுகள்; மற்றும்
- போட்டியாளர்களுடனான பொருத்தமற்ற நடத்தை

குறிப்பு: சகபணியாளர்களிடையேயான கருத்து வேறுபாடுகள் அல்லது மற்றொரு ஊழியரின் பணி செயல்திறன் குறித்த பிரச்சினைகள் போன்று இந்த நன்னடத்தை கோட்பாடுகளின் விதிமீறல்களாக கருதப்படாத உங்கள் பணியிடத்தில் நிகழும் விஷயங்கள் குறித்தும் உங்களுக்கு கவலைகள் இருக்கலாம். இந்தப் பிரச்சினைகளை உங்கள் மேலாளரின் அல்லது உங்களுடைய உள்ளூர் மனிதவளப் பிரதிநிதியின் கவனத்திற்கு நீங்கள் கொண்டு வர வேண்டும்.

## நெறிமுறை தொடர்பான அறிக்கை அளிக்கும் ஆதார அமைப்புகள்

ஓர் அறிக்கையை அளிக்கவும், கேள்விகளைக் கேட்கவும், ஒரு பிரச்சினையை வெளிப்படுத்தவும், தொடர்பு கொள்ளவும்:

- உங்களுடைய மேற்பார்வையாளர் அல்லது மேலாளர்
- மனிதவளக் குழுவின் ஏதேனும் ஓர் உறுப்பினர்
- சட்டத்துறை அல்லது நெறிமுறை மற்றும் அதைக் கடைபிடித்தலுக்கான அலுவலகம் (ethicsandcompliance@cooperstandard.com)
- உலகளாவிய நெறிமுறை மற்றும் அதைக் கடைபிடித்தலுக்கான குழுவின் ஏதேனும் ஓர் உறுப்பினர் (www.CooperStardard.com/ethics)
- நீங்கள் விரும்பும் பட்சத்தில், அடையாளம் தெரியாமல்* www.CSIntegrityLine.com என்பதில் உள்ள கூப்பர் ஸ்டாண்டர்ட் இண்டக்ரிட்டிலைன்

** நாங்கள் செயல்படும் சில நாடுகளில் சில அடையாளமற்ற அறிக்கை அளித்தல்கள் அனுமதிக்கப்படமாட்டா என்பதைத் தயவுசெய்து குறித்துக்கொள்ளவும்.*

## நீங்கள் குரல் கொடுக்கும் போது எதை எதிர்பார்க்கலாம்?

நீங்கள் எப்போது அல்லது எப்படி ஓர் அறிக்கையை அளிக்கிறீர்கள் என்பதைக் கருத்தில் கொள்ளாமல் மரியாதையுடன் நடத்தப்படுவீர்கள் என எதிர்பார்க்கலாம்.

- நாங்கள் உங்கள் அறிக்கையை தீவிர கவனத்துடன் எடுத்துக்கொள்வோம் மற்றும் அறிக்கை அளிக்க முன்வந்ததன் மூலம் நீங்கள் காட்டிய நேர்மையை நாங்கள் பாராட்டுகிறோம்.
- அனைத்து அறிக்கைகளையும் நாங்கள் உடனடியாகவும், முழுமையாகவும் மற்றும் நேர்மையாகவும் விசாரணை செய்வோம். விசாரணைகளில் கலந்துகொள்ளுமாறு கேட்கப்படும் போது நீங்கள் அதில் கலந்துகொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- விசாரணைக்கு முன்னும் பின்னும் இரகசியத்தைப் பாதுகாக்க நியாயமான முயற்சிகளை நாங்கள் மேற்கொள்ளும் அதே வேளையில், ஒரு செயல்திறன் மிக்க விசாரணையை நடத்த சில சென்சிட்டிவ் தகவல்கள் தெரிந்துகொள்ளப்பட வேண்டும் என்ற தேவையின் அடிப்படையில் அவற்றை வெளிப்படுத்த வேண்டியது அவசியமாக இருக்கக்கூடும்.
- சட்டத்திற்குப் புறம்பான அல்லது நெறிமுறையற்ற செயல்பாட்டை முடிவுக்கு கொண்டுவர பொருத்தமான நடவடிக்கையை நாங்கள் எடுப்போம். மற்றும் நீங்கள் அறிக்கை அளித்ததற்காக உங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் பழிவாங்கும் நடவடிக்கையை நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம்.

# கூப்பர் ஸ்டாண்டர்ட் இண்டக்ரிட்டிலைன்

வெளிப்படையான மற்றும் நேர்மையான தகவல் தொடர்புகள் விதிவிலக்குகளாக இல்லாமல், எதிர்பார்ப்புகளாக இருக்கும் ஒரு சூழ்நிலையைப் பேணும் பொறுப்பை நாங்கள் கொண்டுள்ளோம். கேள்விகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக உங்கள் மேற்பார்வையாளரையோ அல்லது நிர்வாகத்தையோ அணுகுவதற்கு நீங்கள் வசதியாக உணரவேண்டும் என நாங்கள் விரும்புகிறோம். அதே நேரத்தில் நீங்கள் மற்றொரு விருப்பத்தேர்வை விரும்பும் சூழ்நிலைகளும் அங்கு இருக்கக்கூடும் என்பதை நாங்கள் புரிந்துகொள்கிறோம்.

எங்களுடைய எழுதப்பட்ட தரநிலைகள் மற்றும் கொள்கைகளின் விதிமீறல்கள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும், நெறிமுறை மற்றும் கடைபிடித்தல் விஷயங்கள் தொடர்பான வழிகாட்டுதலைக் கேட்கவும் உங்களுக்கு உதவிடும் பொருட்டு நேவெக்ஸ் குளோபல் எனப்படும் ஒரு மூன்றாம் தரப்பு நிறுவனத்தால் வழங்கப்படும் கூப்பர் ஸ்டாண்டர்ட் இண்டக்ரிட்டிலைன் என்பதை நாங்கள் உருவாக்கினோம்.

- **24/7** தொலைபேசி வழியாகவோஅல்லது இணையதளம் வழியாகவோ கூப்பர் ஸ்டாண்டர்ட் இண்டக்ரிட்டிலைன் ஒரு நாளில் 24 மணி நேரமும், ஒரு வாரத்தில் ஏழு நாட்களும் கிடைக்கப்பெறுகிறது.
- **இரகசியமானது.** நமது நிறுவனத்திற்கு வெளியில் உள்ள நேவெக்ஸ் குளோபல் நிறுவனத்தில் உள்ள நபர்களால் கூப்பர் ஸ்டாண்டர்ட் இண்டக்ரிட்டிலைனில் பதில்கள் அளிக்கப்படும், அவர்கள் அறிக்கைகளை கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் உள்ள நெறிமுறை மற்றும் அதைக் கடைபிடித்தலுக்கான அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பார்கள். அழைப்புகள் மற்றும் ஆன்லைன் அறிக்கைகள் ஆகியவற்றின் அடையாளங்கள் கண்டுபிடிக்கப்படமாட்டா அல்லது அவை பதிவு செய்யப்படமாட்டா.
- **அடையாளத்தைத் தெரிவிக்காமல் –** நீங்கள் விரும்பும்பட்சத்தில். எங்களுடைய விசாரணைக்கு உதவிடும் பொருட்டு உங்கள் பெயர் மற்றும் தொடர்புக்கான தகவல் உட்பட முடிந்தவரை அதிகமான தகவல்களை எங்களோடு பகிர்ந்துகொள்ளுமாறு நீங்கள் ஊக்குவிக்கப்படுகிறீர்கள். எனினும் உங்கள் பெயரைப் பகிர்ந்து கொள்வது உங்களுக்கு அசௌகரியமாக இருந்தாலும் கூட உள்ளூர் சட்டத்தால் அனுமதிக்கப்படும் வரை உங்களுடைய அறிக்கை செல்லுபடியாகும் மற்றும் உங்கள் அடையாளத்தை அளிக்காமல் அதை நீங்கள் சமர்ப்பிக்கலாம்.
- **எப்போதும் விசாரணை செய்யப்படும்.** நெறிமுறை மற்றும் அதைக் கடைபிடித்தல் தொடர்பான விஷயங்கள் குறித்த அனைத்து அறிக்கைகளையும் நாங்கள் தீவிர கவனத்துடன் எடுத்துக்கொள்வோம் மற்றும் நாங்கள் ஒவ்வொரு அறிக்கையையும் பார்வையிட்டு மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது பொருத்தமாக இருக்கும் பட்சத்தில் அதைத் தொடர்ந்து மேற்கொள்வோம்.
- **கருத்துப் பரிமாற்றம்.** பிரச்சினைகளுக்கு உரிய நேரத்தில் பதில் அளிக்க எங்கள் நிறுவனம் சாத்தியமான அனைத்தையும் மேற்கொள்ளும். நீங்கள் ஒரு குறிப்புதவி எண்ணைப் பெறுவீர்கள், இதன் மூலம் உங்கள் அறிக்கையின் நிலையை நீங்கள் சரிபார்த்துக்கொள்ளலாம் மற்றும் நீங்கள் உங்களை அடையாளப்படுத்திக்கொள்ளாமல் இருப்பதைத் தேர்வு செய்தால் அடையாளத்தை வெளிப்படுத்தால் நீங்கள் இண்டக்ரிட்டிலைன் வழியாக நெறிமுறை மற்றும் அதைக் கடைபிடித்தலுக்கான அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளலாம். தீர்மானம் குறித்த விவரங்கள் உங்களுக்கு அளிக்கப்படாது, ஆனால் அனைத்து பொருத்தமான நடவடிக்கைகளும், விசாரணைகளும் பூர்த்தி செய்யப்பட்ட பிறகு உங்கள் அறிக்கையின் நிலை “முடிக்கப்பட்டுவிட்டது (closed)” என காண்பிக்கப்படும்...

CooperStandard
INTEGRITYLINE

WWW.CSINTEGRITYLINE.COM



## திறந்த கதவுக் கொள்கை



உங்களுக்கு ஒரு கேள்வி இருக்கும் பட்சத்தில் அல்லது ஒரு பிரச்சினை குறித்து நீங்கள் அறிக்கை அளிக்க வேண்டிய தேவை எழும்பட்சத்தில் உங்களுக்குத் தேவையான ஆதரவை நீங்கள் பெறுவதை எங்களுடைய திறந்த கதவுக்கொள்கை உறுதி செய்கிறது. உங்களுக்கு உதவி தேவைப்படும் போது உங்களுடைய மேற்பார்வையாளர் அல்லது மேலாளர் உங்களுக்கு ஒரு முக்கியமான ஆதாரவளமாக இருப்பார். தேவைக்கேற்றவாறு கேள்விகளைக் கேட்க வேண்டும் என்பது உட்பட பொருத்தமான வகையில் செவிமடுக்க வேண்டும் எனவும், பதில் அளிக்க வேண்டும் எனவும் உங்கள் மேற்பார்வையாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. மனிதவளத்துறைக்கோ அல்லது நெறிமுறை மற்றும் அதைக்கடைபிடித்தலுக்கான அலுவலகத்திற்கோ அனுப்பப்பட்ட குறிப்பிட்ட சில பிரச்சினைகளை கவனத்திற்கு கொண்டு வர வேண்டும் என அவரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது.

முதலில் உங்களுடைய மேற்பார்வையாளரிடம் செல்வதற்கு அசௌகரியமாக இருப்பதாக நீங்கள் எண்ணினாலோ அல்லது உங்களுக்குத் தேவையான ஆதரவு கிடைக்கப்பெறவில்லை என்றாலோ, விஷயத்தை நீங்கள் நிர்வாகத்தின் மேல்மட்டத்திற்கோ அல்லது உங்களுடைய மனிதவளப் பிரதிநிதிக்கோ எடுத்துச்செல்ல ஊக்குவிக்கப்படுகிறீர்கள்.

நெறிமுறை தொடர்பான அறிக்கை அளிக்கும் கூடுதல் ஆதார அமைப்புகளை நிறுவனம் அளிக்கிறது:

- உங்களுடைய மேற்பார்வையாளர் அல்லது மேலாளர்
- மனிதவளக் குழுவின் ஏதேனும் ஓர் உறுப்பினர்
- நெறிமுறை மற்றும் அதைக்கடைபிடித்தலுக்கான அலுவலகம் (ethicsandcompliance@cooperstandard.com)
- உலகளாவிய நெறிமுறை மற்றும் அதைக் கடைபிடித்தலுக்கான குழுவின் ஏதேனும் ஒரு உறுப்பினர் (www.CooperStandard.com/ethics)
- இணையம் வழியாகவும், தொலைபேசி மூலமாகவும் கிடைக்கப்பெறும் கூப்பர் ஸ்டாண்டர்ட் இண்டக்ரிட்டிலைன் (www.CSIntegrityLine.com)

## பழிவாங்குதல்: என என்றால் என்ன?

ஓர் அறிக்கை அளித்து விட்ட காரணத்திற்காக அல்லது ஒரு விசாரணையில் பங்குபெற்றவர் என்ற காரணத்திற்காக யாரேனும் ஒருவரை வேறுவிதமாக நடத்துவது பழிவாங்கும் நடவடிக்கை என அழைக்கப்படுகிறது. பழிவாங்கும் நடவடிக்கை வெளிப்படையாகவே மேற்கொள்ளப்படலாம்- அதாவது நிறுவனத்தின் கொள்கையுடன் முரண்பட்ட ஒரு நடத்தை குறித்த அறிக்கையை அளித்ததற்காக அல்லது ஒரு பிரச்சினையைத் தெரிவித்ததற்காக அல்லது ஒரு விசாரணையில் பங்கேற்றதற்காக ஒரு நிறுவனம் யாரேனும் ஒருவரைப் பதவியிறக்கம் செய்தல் அல்லது பணிநீக்கம் செய்தல். ஆனால் இது மிக நுண்ணியதாகவும் இருக்கக்கூடும்.

யாரேனும் ஒருவர் நல்லெண்ணத்தில் எங்கள் கொள்கையுடன் முரண்படும் நடத்தை குறித்து ஓர் அறிக்கையை அளித்த காரணத்தினால் அல்லது பிரச்சினையைத் தெரிவித்த காரணத்தினால் அல்லது ஒரு விசாரணையில் கலந்து கொண்ட காரணத்தினால் அவர்மீது எடுக்கப்படும் பின்வரும் நடவடிக்கைகள் பழிவாங்கும் நடவடிக்கைக்கான உதாரணங்களில் உள்ளடங்கும்:

- யாரேனும் ஒருவருடைய பணிப்பகுதியை விரும்பத்தகாத பகுதிக்கு மாற்றுதல்;
- கூட்டங்களில் முன்பு அதிகமான செயல்பாடுகளில் ஈடுபட்ட யாரேனும் ஒருவரிடம் நீங்கள் மேற்கொண்டு கூட்டங்களுக்கு வரவேண்டாம் எனக்கூறுதல்;
- எந்த வகையிலும் மேற்கொள்ளப்படும் அச்சுறுத்துல்கள்;
- பதவி உயர்வுகள் அல்லது பலன்கள் மறுக்கப்படுதல்; மற்றும்
- அறிக்கையை அளித்த நபரைத் தவிர துறையில் உள்ள அனைவரையும் மதிய உணவுக்காக வெளியில் அழைத்துச் செல்லுதல்.

## பழிவாங்குதல் இல்லா கொள்கை

கூப்பர் ஸ்டாண்டர்ட் நிறுவனத்தில், நல்ல எண்ணத்தில் அறிக்கையை அளிக்கும் அல்லது ஒரு விசாரணையில் பங்கேற்கும் யாரேனும் ஒருவருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எந்த வடிவிலான பழிவாங்கும் நடவடிக்கையையும் நாங்கள் பொறுத்துக்கொள்ள மாட்டோம். நீங்கள் அளிக்கும் தகவல்கள் முழுமையானவை மற்றும் அதை நீங்கள் உண்மை என நம்புகிறீர்கள் என்பதே நல்ல எண்ணத்தில் அறிக்கை அளித்தல் என்பதன் அர்த்தம் ஆகும். பழிவாங்கும் நடவடிக்கைக்குப் பொறுப்பு வகிக்கும் அல்லது பழிவாங்கும் நடவடிக்கையில் பங்கேற்கும் தனிநபர்கள் பணிநீக்கம் உட்பட, பணிநீக்கம் வரையிலான ஒழுங்குநடவடிக்கைக்கு உள்ளாக்கப்படுவார்கள். பழிவாங்கும் நடவடிக்கைக்கு ஆட்பட்டதாக நீங்கள் நம்பினால், அதை நீங்கள் எங்களுடைய நெறிமுறை தொடர்பான அறிக்கை அளிக்கும் ஆதார அமைப்புகளில் ஒன்றிற்குத் தெரிவிக்கவும். நல்ல எண்ணம் இல்லாமல் ஓர் அறிக்கையை அளிக்கும் எவர் ஒருவரும் ஒழுங்கு நடவடிக்கைக்கு உள்ளாக்கப்படக்கூடும்.

# பணியிடத்தில் **நேர்மையே எங்களை இயக்குகிறது**

- பரஸ்பர மரியாதை
- பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்குதல்
- பாதுகாப்பான பணியிடம்
- நிதிசார்ந்த பதிவுகள் மற்றும் அறிக்கைகள்
- நியாயமான ஊதியங்கள்
- பதிவுகள் மேலாண்மை
- சொத்துக்களைப் பாதுகாத்தல்
- தகவல் அமைப்புகள்
- நலன் சார்ந்த முரண்பாடுகள்
- இரகசியமான தகவல்
- அறிவுசார் சொத்து



# பரஸ்பர மரியாதை

கூப்பர் ஸ்டாண்டர்ட் நிறுவனத்திற்காக பணிபுரிதல் என்பது ஒருவருக்கொருவர் மரியாதையுடனும், கண்ணியத்துடனும், மதிப்புடனும் நடந்துகொண்டும், ஒத்துழைப்பு அளித்தும் பணியாற்றும் ஒரு தொழில்முறை வல்லுநர்களின் குழுவில் ஒரு பகுதியாக இருத்தல் எனப் பொருள்படும். எங்களுடைய குழுவில் எளியவர்களைக் கொடுமைப்படுத்துதல், தொல்லை கொடுத்தல் அல்லது அச்சுறுத்தல் ஆகியவற்றிற்கு எந்த இடமும் இல்லை. ஒருவருக்கொருவர் ஊக்கத்தையும் ஆதரவையும் அளிப்பதன் மூலம் நாங்கள் எங்கள் நிறுவனத்தை முன்னோக்கி கொண்டு செல்கிறோம்.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- அனைத்து நேரங்களிலும் மரியாதையுடன் நடந்து கொள்ள வேண்டும்.
- இந்தக்குழுவில் உள்ள யாரேனும் ஒருவர் தான் இந்தக்குழுவின் ஒரு பாகமாக இல்லை என உணரும் வகையில் செயல்படக்கூடாது.
- யாரேனும் ஒருவர் மரியாதைக் குறைவாக நடத்தப்பட்டாலோ அல்லது பாகுபடுத்தும் அல்லது தொல்லை கொடுக்கும் செயல்களை நாங்கள் கவனித்தாலோ அதற்காக குரல் கொடுக்க வேண்டும்.



## தொல்லை கொடுத்தல்: என்றால் என்ன?

அச்சுறுத்துவதாகவோ, பகைமையாகவோ அல்லது நிந்திக்கப்படுவதாகவோ யாரேனும் ஒருவர் கருதும் வகையில் அமைந்த வார்த்தைகள் அல்லது செயல்கள் அல்லது காரணமின்றி யாரேனும் ஒருவருடைய பணியில் குறுக்கிடும் ஒரு சூழ்நிலையை உருவாக்கும் வார்த்தைகள் அல்லது செயல்கள் தொல்லைகொடுத்தல் என அழைக்கப்படுகிறது. இதில் பின்வரும் நடத்தைகளும் உள்ளடங்குகின்றன:

- மற்றொரு நபர் விரும்பாத வகையில் அமைந்த உடல்ரீதியான தொடர்பு அல்லது தொடுதல்;
- இனம், இனப்பிரிவு மற்றும் பாலினம் சார்ந்த மறைமுக குத்தல் பேச்சுக்கள் அல்லது நகைச்சுவைகள்;
- அவமரியாதையான மின்னஞ்சல்கள், புகைப்படங்கள் அல்லது காணொளிகள்;
- ஒரு சகபணியாளரைக் கொடுமைப்படுத்துதல்; மற்றும்; மற்றும்
- பாலியல் ரீதியான அனுகூலங்களைப் பெற அதிகாரம் கொண்ட பதவியைத் தவறாகப் பயன்படுத்துதல்.

உடல்ரீதியான செயல்பாடுகள், எழுத்துப்பூர்வமான மற்றும் பேச்சுப் பூர்வமான குறிப்புரைகள் மற்றும் காணொளிகள் அல்லது படங்கள்.

பாலியல் ரீதியாக தொல்லை கொடுத்தல் இருக்கும் அதே வேளையில் வேறு வகையான தொல்லை கொடுத்தல்களும் இங்கு உள்ளன. இனம், கர்ப்பம், வயது, பாரம்பரியம், இராணுவ வீரர் நிலை அல்லது மூத்த இராணுவ வீரர் நிலை, நிறம், மதம், சமய நம்பிக்கை, இயலாமை, திருமண நிலை, உடல்ரீதியான அல்லது மனரீதியான இயலாமை, மரபியல் தகவல், பிறந்த நாடு, பாலினம், பாலின அடையாளம், பாலியல் விருப்பம் அல்லது பொருந்தக்கூடிய சட்டங்களால் பாதுகாக்கப்படும் வேறு ஏதேனும் குணாதிசியம் ஆகியவற்றின் அடிப்படையிலும் தொல்லை கொடுக்கப்படக்கூடும்.

எந்த ஓர் ஊழியராலும் அல்லது வாடிக்கையாளர்கள், வாங்குநர்கள், வழங்குநர்கள் அல்லது வருகையாளர்கள் போன்ற மூன்றாம் தரப்பு நபர்களாலும் தொல்லை கொடுக்கப்படுவதை நாங்கள் அனுமதிப்பதில்லை என்பதே மரியாதையான பணியிடத்தைப் பேணுதல் என்பதன் அர்த்தம் ஆகும்.

## பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்குதல்

நாங்கள் ஒவ்வொருவரும் எங்களுடைய சொந்த தனித்துவம் வாய்ந்த அனுபவங்களையும், தொலைநோக்குப் பார்வைகளையும் எங்களுடைய பணியில் கொண்டுவருவதால் தான் உலகத்தரம் வாய்ந்த எங்களுடைய குழுவானது தழைத்தோங்குகிறது. பன்முகத் திறமையே எங்களுடைய முக்கிய மதிப்பீடுகளில் ஒன்றாக விளங்குகிறது மற்றும் பன்முகத்தன்மை கொண்ட எண்ணங்கள் எங்கள் நிறுவனத்தை வலிமையான நிறுவனமாக ஆக்குகின்றன. கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் எங்களுடைய ஊழியர்களுக்கு நாங்கள் சம வாய்ப்புகளை அளிக்கிறோம் மற்றும் எந்த வகையான சட்டத்திற்குப் புறம்பான பாகுபாட்டையும், தொல்லை கொடுத்தலையும் நாங்கள் தடைசெய்கிறோம்.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் லியுறுத்துகிறது:

- செயல்திறன் மதிப்பீடுகள் அல்லது திறமைகள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் யாரை பணியமர்த்த வேண்டும் மற்றும் ஊக்குவிக்க வேண்டும் என்பதைத் தீர்மானித்தல் உள்ளிட்ட வேலைவாய்ப்பு தொடர்பான முடிவுகளை எடுக்க வேண்டும்.
- ஒருவருடைய தோற்றத்தை வைத்தோ, அவர் எங்கிருந்து வருகிறார் என்பதை வைத்தோ அவருடைய மதத்தை வைத்தோ அல்லது பொருந்தக்கூடிய சட்டங்களால் பாதுகாக்கப்படும் குணாதிசியத்தை வைத்தோ அவரை ஒருபோதும் வேறுவிதமாக நடத்தக்கூடாது.
- உங்களுடைய சொந்த அனுபவங்கள் மற்றும் தொலைநோக்குப் பார்வைகள் ஆகியவற்றிலிருந்து வேறுபட்ட அனுபவங்களையும், தொலைநோக்குப் பார்வைகளையும் கொண்டிருக்கக்கூடும் உங்கள் சகபணியாளர்களின் எண்ணங்களுக்கு மதிப்பு அளிக்க வேண்டும் மற்றும் அவற்றை உள்ளடக்க வேண்டும்
- பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்குதல் ஆகியவற்றிற்கு மதிப்பு அளிக்கும் வழங்குநர்களுடன் பணியாற்றுதல்.

### சட்டத்தால் பாதுகாக்கப்படும் குணாதிசியங்கள்- அவை என்னென்ன?

குறிப்பிட்ட சில பண்புகளின் அல்லது குணாதிசியங்களின் அடிப்படையில் பாகுபாடு காட்டப்படுவதிலிருந்து தனிநபர்களைப் பாதுகாக்க சட்டங்கள் உள்ளன. வேலைவாய்ப்பு தொடர்பான முடிவுகளை எடுக்கும் போது இந்தக் குணாதிசியங்கள் ஒருபோதும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடாது. அவற்றில் பின்வருபவை உள்ளடங்குகின்றன:

- இனம், சரும நிறம் அல்லது பிறந்த நாடு;
- பாலினம், கர்ப்பம், பாலின அடையாளம் அல்லது பாலியல் விருப்பம்;
- மத நம்பிக்கைகள் அல்லது சமய நம்பிக்கை;
- வயது;
- உடல்ரீதியான அல்லது மனரீதியான இயலாமை
- கர்ப்பம்;
- மரபியல் தகவல்;
- திருமண நிலை அல்லது சிவில் பங்குதாரர் நிலை;
- இராணுவ வீரர் நிலை அல்லது மூத்த இராணுவ வீரர் நிலை; மற்றும்
- பொருந்தக்கூடிய மாநில அல்லது உள்ளூர் சட்டத்தால் பாதுகாக்கப்படும் பிற குணாதிசியங்கள்

## பாதுகாப்பான பணியிடம்

அனைத்து ஊழியர்களுக்கும் ஒரு பாதுகாப்பான, மரியாதையான மற்றும் பத்திரமான பணியிடத்தை வழங்கும் பொறுப்பை கூப்பர் ஸ்டாண்டர்ட் கொண்டுள்ளது. பணியிடத்தில் நாங்கள் வன்முறையையோ, வன்முறை மிரட்டலையோ அல்லது உடல்ரீதியான அச்சுறுத்தலையோ பொறுத்துக்கொள்ளமாட்டோம். எங்களது ஊழியர்கள் பொறுப்புள்ளவர்களாகவும், தங்களுடைய சொந்தப் பாதுகாப்பையும், சக ஊழியர்களின் பாதுகாப்பையும் கவனிப்பவர்களாகவும், ஒட்டுமொத்த பாதுகாப்புக் கலாச்சாரத்தைப் பேணும் எங்களுடைய முக்கிய மதிப்பீட்டிற்கு ஆதரவு அளிப்பவர்களாகவும் இருப்பதற்கு நாங்கள் அவர்களையே நம்பியுள்ளோம். எங்களுடைய வழங்குநர்களிடமிருந்தும் இதே தரநிலையிலான பாதுகாப்பை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- எவர் ஒருவரையும் அச்சுறுத்தும் வகையில் அல்லது மிரட்டும் வகையில் அல்லது உடல்ரீதியாக தாக்கும் வகையில் நடத்தக்கூடாது.
- சட்டப்படியாக உரிமம் பெற்ற துப்பாக்கிகள் உள்ளிட்ட ஆயுதங்களை நிறுவனத்திற்குச் சொந்தமான, நிறுவனத்தால் குத்தகைக்கு விடப்பட்ட அல்லது நிறுவனத்தால் கட்டுப்படுத்தப்பட்ட எந்த இடத்திற்குள்ளும் கொண்டுவரக்கூடாது. மேலும் எந்தவிதமான ஆயுதங்களையும் நிறுவனத்தின் வியாபாரத்திலோ, நிகழ்ச்சிகளிலோ, வாகனங்களிலோ வைத்திருத்தல் கூடாது
- மற்றொரு நபருக்கு ஒரு போதும் உடல்ரீதியான காயத்தை ஏற்படுத்தக்கூடாது.
- ஒருவருடைய பணியைப் பாதுகாப்பாகவும், செயல்திறனுடனும் மேற்கொள்ளும் திறனில் குறுக்கிடும் சட்டத்திற்குப் புறம்பான போதை பொருள்கள், , மது அல்லது பிற போதை பொருள்கள் உபயோகித்து ஒருபோதும் பணி செய்ய வரக்கூடாது.
- பணி நேரத்தில் மதுவை மற்றும் பொருந்தக்கூடிய ஏதேனும் ஒரு சட்டத்தின் கீழ் சட்டத்திற்குப் புறம்பானதாகக் கருதப்படும் ஒரு போதைப்பொருளை அல்லது ஒரு கட்டுப்படுத்தப்பட்ட பொருளை வைத்திருப்பதாக சந்தேகிக்கப்படும் எவரும் அறிவிப்புடன் அல்லது அறிவிப்பின்றி ஆய்வு மற்றும் தேடுதலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். நிறுவன வளாகத்தினுள் பணி நேரத்திற்கும் அல்லது கூப்பர் ஸ்டாண்டர்ட் சார்பாக வணிகத்தை மேற்கொள்ளும் வேறு எந்த இடத்திற்கும் இது பொருந்தும்.
- சந்தேகத்திற்கிடமாகவோ, அமைதியைக் குலைக்கும் வகையிலோ அல்லது அச்சுறுத்தும் வகையிலோ தோற்றமளிக்கும் நடத்தை குறித்து எங்களது நெறிமுறை தொடர்பான அறிக்கை அளிக்கும் ஆதார அமைப்புகளில் ஒன்றிற்குத் தெரிவிக்கவும். நகைச்சுவையாக தோன்றும் வகையில் செய்யப்பட்டாலும் கூட யாரேனும் ஒருவரை பாதுகாப்பற்ற வகையில் உணரச்செய்யும் வார்த்தைகளும் அல்லது நடவடிக்கைகளும் அவசியம் வெளிப்படுத்தப்பட வேண்டும். (நீங்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்த யாரேனும் ஒருவரோ உடனடியான ஆபத்தில் இருந்தால் உடனடியாக சட்ட அமலாக்க அதிகாரிகளை அழைக்கவும். பின்னர் இந்த நிகழ்வு குறித்து ஒரு மேற்பார்வையாளருக்கோ அல்லது மேலாளருக்கோ அறிக்கை அளிக்கவும் அல்லது ஏதேனும் ஒரு நெறிமுறை தொடர்பான அறிக்கை அளிக்கும் ஆதார அமைப்பைப் பயன்படுத்தி அறிக்கை அளிக்கவும்.)

# ஒட்டுமொத்த பாதுகாப்புக் கலாச்சாரம்: இதையே நாங்கள் செய்கிறோம்

எங்களுடைய ஒட்டுமொத்த பாதுகாப்புக் கலாச்சாரம் அனைவருடைய பொறுப்பும் ஆகும். மற்றும் இந்தக் கலாச்சாரத்தில் பணியாற்றுவது எங்களுடைய கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறைகளைத் தாண்டியும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான அவசியத்தை எங்களுக்கு ஏற்படுத்துகிறது.

- பாதுகாப்பற்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்றனவா என்று கவனித்து அது குறித்து அறிக்கை அளிக்கவும்.
- கருவிகளையும், உபகரணங்களையும் பாதுகாப்பாக பயன்படுத்தவும்.
- தேவையான தனிநபர் பாதுகாப்பு உபகரணங்களின் பயன்பாடு உள்ளிட்ட பணி சார்ந்த அறிவுரைகளைப் பின்பற்றவும்.
- சந்தேகத்திற்கிடமாக அல்லது ஆபத்து நிறைந்ததாக தோன்றும் எந்த ஒரு நடத்தை குறித்தும் அறிக்கை அளிக்கவும்.
- சட்டத்திற்குப் புறம்பான போதைப்பொருட்களை, மதுவை அல்லது உங்களுடைய பணியைப் பாதுகாப்பாகவும், செயல்திறனுடனும் மேற்கொள்ளும் திறனை முடக்கும் எந்த பிற போதைபொருட்களையும் வைத்திருப்பதோ, பயன்படுத்துவதோ அல்லது அவற்றின் ஆதிக்கத்தில் இருப்பதோ கூடாது.
- நீங்கள் பலவீனமாக இருக்கும் போது பணி செய்யக்கூடாது.
- மற்றவர்களை வன்முறையுடன் தாக்கவோ, அவர்களுக்கு தீங்குவிளைவிக்கவோ அல்லது அவர்களை அச்சுறுத்தவோ கூடாது.

*நாங்கள் உங்களை நம்பியிருக்கிறோம்: இவற்றையோ அல்லது எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாட்டின் வேறு எந்த விதிமீறல்களையோ நீங்கள் பார்த்தால், தயவுசெய்து எங்களது நெறிமுறை தொடர்பான அறிக்கை அளிக்கும் ஆதார அமைப்புகளில் ஒன்றிற்குத் தெரிவிக்கவும்.*



# நிதிசார்ந்த பதிவுகள் மற்றும் அறிக்கைகள்

எங்களுடைய நிறுவனத்தின் நிதி சார்ந்த தகவல்களை உண்மையாகவும், வெளிப்படையாகவும் நாங்கள் தெரிவிப்போம் என எங்கள் வாடிக்கையாளர்களும், எங்களுடைய பங்குதாரர்களும் மற்றும் பொதுமக்களும் எங்கள் மீது மிகுந்த நம்பிக்கை வைத்துள்ளனர். நிறுவனத்தின் நிதி சார்ந்த தகவல்களை நாங்கள் தாக்கல் செய்யும் போது பத்திரங்கள் மற்றும் பரிமாற்றங்களுக்கான ஆணையத்தின் வெளியிடுதல் மற்றும் வெளியிடாமை ஆகியவற்றிற்கான அனைத்து தேவைகளையும் பின்பற்றும் அதே வேளையில் எங்களுடைய அறிக்கைகள் எங்கள் நிறுவனத்தின் நிதி நிலையையும், அதன் வணிகப் பரிவர்த்தனைகளையும் துல்லியமாகவும், நேர்மையாகவும், முழுமையாகவும் பிரதிபலிக்கிறது என்பதை நாங்கள் உறுதி செய்வது அவசியமாகிறது. அதே நேரத்தில் நாங்கள் சிறந்த கணக்கியல் கோட்பாடுகளையும் பின்பற்ற வேண்டும். எங்களுடைய பதிவுகள் மற்றும் நிதிசார்ந்த அறிக்கைகளின் நேர்மையை உறுதி செய்வதற்கான கட்டுப்பாடுகள் எங்கள் நிறுவனத்தில் நடைமுறையில் உள்ளன.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- அனைத்து பரிவர்த்தனைகளும் துல்லியமாகவும், முழுமையாகவும், உரிய நேரத்தில் பதிவு செய்யப்பட வேண்டும்.
- ஒரு தவறான அல்லது தவறாக வழிநடத்தக்கூடிய அறிக்கையை ஒருபோதும் வேண்டுமென்றே அளிக்கக்கூடாது அல்லது எங்களுடைய சார்பாக ஒரு தவறான அறிக்கையை யாரேனும் ஒருவர் அளிக்கும் படி அவசியப்படக்கூடாது.
- பொருத்தமான தகவல்களைப் பதிவுகளில் கொண்டுவராமல் விட்டுவிடக்கூடாது.
- அனைத்து செலவீனங்கள் குறித்தும் துல்லியமாக அறிக்கை அளிக்கவும் மற்றும் அதற்கு ஆதரவு சேர்க்கும் ஆவணங்களையும் அளிக்கவும்.
- உட்புற மற்றும் வெளிப்புற தணிக்கையாளர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு அளித்து அனைத்து தேவையான தகவல்களையும் நியாயமாகவும், முழுமையாகவும், துல்லியமாகவும் தெரிவிக்கவும்.
- தனிப்பட்ட பலனுக்காக செலவீனத்தை மீளப்பெறுவதை ஒருபோதும் செய்யக்கூடாது அல்லது தனிப்பட்ட முறையில் வாங்குவதற்காக நிறுவனத்தின் கணக்குகளைப் ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது.
- செலவின அறிக்கைகள், பரிவர்த்தனைகள் மற்றும் நிதி சார்ந்த அறிக்கைகள் ஆகியவற்றில் ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் அது குறித்து உடனடியாக சட்டத்துறைக்கோ அல்லது உட்புற தணிக்கைக்கோ அல்லது இண்டக்ரிட்டிலைனுக்கோ (உங்கள் அடையாளத்தை நீங்கள் தெரிவிக்க விரும்பாவிட்டால்) அறிக்கை அளிக்கவும்.

## மோசடி என்றால் என்ன?

தவறாக வழிநடத்துகின்ற அல்லது நேர்மையற்ற எந்த ஒரு செயலும் மோசடி என அழைக்கப்படுகிறது. மோசடியானது ஒரு தனிநபரின் அல்லது நிறுவனத்தின் நம்பகத்தன்மையை அழித்துவிடுகிறது. இது நமது வழங்குநர்களை, நமது வாடிக்கையாளர்களை, நமது நிறுவனத்தை மற்றும் நமது ஊழியர்களை காயப்படுத்தக்கூடும். மோசடி நடந்திருப்பதாக நீங்கள் சந்தேகித்தால் உடனடியாக நீங்கள் எங்களுடைய நெறிமுறை தொடர்பான அறிக்கை அளிக்கும் அமைப்புகளில் ஒன்றிற்கு அவசியம் பேச வேண்டும். ஒரு பிரச்சினை குறித்து எவ்வளவு சீக்கிரமாக நாங்கள் அறிந்துகொள்கிறோமோ அவ்வளவு சீக்கிரம் அதை தீர்த்து வைக்க எங்களால் பணியாற்ற முடியும்.

மோசடியானது பின்வருவன உள்ளிட்ட பல வடிவங்களில் இருக்கலாம்:

- பொய்யான நிதி சார்ந்த பதிவுகளை உருவாக்குதல் அல்லது அவற்றை நேர்மையற்ற முறையில் மாற்றுதல்;
- ஒரு தயாரிப்பானது உண்மையில் வழங்கப்படாமல் அது வழங்கப்பட்டது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துதல்; அல்லது உண்மையில் அனுப்பப்பட்ட தயாரிப்புகளின் எண்ணிக்கையை காட்டிலும் அதிக எண்ணிக்கையில் தயாரிப்புகள் அனுப்பப்பட்டது போன்ற தோற்றத்தை ஏற்படுத்துதல்;
- முழுமையாக உருவாக்கப்படாத அல்லது நீங்கள் விவரிக்கும்படி உண்மையில் வேலை செய்யாத ஒரு சிறப்பம்சத்தை உண்மையாகவே ஒரு தயாரிப்பு கொண்டுள்ளது எனக்கூறுதல்;
- தரத்திற்கான சோதனை செய்யப்படாமல் அது வெற்றிகரமாக பூர்த்திசெய்யப்பட்டுவிட்டது எனக்கூறுதல்;
- அலுவலகப் பணியை உள்ளடக்காத நண்பர்களுடன் சாப்பிட்ட இரவு உணவுக்கு ஆன செலவிற்காக ஒரு செலவின அறிக்கையை பூர்த்தி செய்து அச்செலவை மீள பெறக் கோருதல்;
- ஒரு செலவின அறிக்கையுடன் ஒரு போலியான ரசீதையோ அல்லது ஆதரவு சேர்க்கும் ஆவணத்தையோ சமர்ப்பித்தல்.



## நியாயமான ஊதியங்கள்

கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் நாங்கள் அனைத்து சட்டங்களையும் பின்பற்றுகிறோம் மற்றும் நிறுவனத்தையும் ஒரு தரப்பாக உள்ளடக்கிய பணி நேரங்கள், ஊதியங்கள் மற்றும் பலன்கள் தொடர்பான அனைத்து ஒப்பந்தங்களுக்கும் மரியாதை அளிக்கிறோம் மற்றும் நாங்கள் வணிகம் செய்யும் அனைவரிடமிருந்தும் இதை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- பணி நேரங்கள் மற்றும் ஊதியங்கள் தொடர்பான சட்டங்களை எங்களுடைய வழங்குநர்களும் பின்பற்றுகிறார்கள் என்பதை நாங்கள் உறுதி செய்ய வேண்டும்.
- கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் தங்களிடமிருந்து என்ன எதிர்பார்க்கப்படுகிறது மற்றும் தங்களுக்கு என்னவிதமான உரிமைகள் உள்ளன என்பது உட்பட தங்களுடைய வேலையின் வரையறைகள் குறித்து அறிந்திருப்பதை நாங்கள் உறுதி செய்ய வேண்டும்.
- சட்டத்தால் வரையறுக்கப்பட்ட அதிகபட்ச நேரங்களுக்கு அப்பால் ஊழியர்களைப் பணி செய்ய ஒருபோதும் நிர்ப்பந்திக்கக்கூடாது.
- சட்டத்தால் வரையறுக்கப்பட்ட ஊழியர்களுக்கு விடுமுறை மற்றும் ஓய்வு நேரம் அளிக்கப்படுகிறது என்பதை நாங்கள் உறுதி செய்ய வேண்டும்.
- பொருந்தக்கூடிய சட்டங்களின் படி ஊழியர்களுக்கு ஊதியங்கள் அளிக்கப்படுகின்றன என்பதையும், சட்டத்தால் வரையறுக்கப்பட்ட குறைந்தபட்ச ஊதியம் வழங்கப்படுகிறது என்பதையும் நாங்கள் உறுதி செய்ய வேண்டும்.

## பதிவுகள் மேலாண்மை

நாம் உருவாக்கும் பதிவுகள் நம்முடைய எண்ணங்கள், முடிவுகள் மற்றும் பரிமாற்றங்கள் ஆகியவற்றைத் துல்லியமாக பிரதிபலிக்க வேண்டும். நாம் தொழில்முறையிலான பதிவுகளை உருவாக்கி அவற்றை கூப்பர் ஸ்டாண்டர்ட்-ன் பதிவு மேலாண்மைக் கொள்கைகளின் படியும், பொருந்தக்கூடிய சட்டங்களின்படியும் கவனமாக மேலாண்மை செய்ய வேண்டும்.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- மின்னஞ்சல்கள், உரைச் செய்திகள், கடிதங்கள் மற்றும் பிற தகவல் தொடர்புகள் ஆகியவை நிறுவனப் பதிவேடுகளின் ஒரு பகுதியாக ஆகும் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். மரியாதையாகவும், தொழில்முறையிலும் நாம் தகவல் தொடர்பை மேற்கொள்ள வேண்டும்.
- நமது நிறுவனத்தின் பதிவேடுகள்-தக்கவைக்கப்படும் கால அட்டவணை, பதிவேடுகளை அறிவிக்கப்பட்ட கால அளவுக்கு தக்க வைத்தல் மற்றும் தக்கவைக்கும் காலம் முடிந்தவுடன் அவற்றை முறையாக அப்புறப்படுத்துதல் ஆகியவற்றை நாம் பின்பற்ற வேண்டும்.
- ஒரு வழக்கு அல்லது சட்டரீதியாக ஆவணங்களை வைத்திருக்க கோரும் ஆணை பிறப்பிக்கப்படுதல் போன்று பதிவேடுகளை வழக்கத்தைவிட நீண்ட காலம் வைத்திருப்பதற்கான கோரிக்கை இருக்கும்பட்சத்தில் சட்டத்துறையின் வழிகாட்டுதலை நாம் பின்பற்ற வேண்டும்.

## சொத்துக்களைப் பாதுகாத்தல்

உங்களுடைய வேலையின் ஒரு பகுதியாக எங்களுடைய நிறுவனப் பகுதிகள், உபகரணங்கள், பொருட்கள், சொத்து, தொழில்நுட்பம், தகவல் மற்றும் அறிவுசார் சொத்து உள்ளிட்ட நிறுவனத்தின் பல சொத்துக்களை அணுகும் வசதி உங்களுக்கு இருக்கும்.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- நிறுவனத்தின் சொத்துக்களை நிறுவனத்தின் வணிகத்திற்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும்
- சொந்த உபயோகத்திற்காகவோ, மற்றொருவரின் உபயோகத்திற்காகவோ அல்லது ஒரு முறையற்ற அல்லது சட்டத்திற்குப் புறம்பான நோக்கத்திற்காகவோ நிறுவனத்தின் எந்த ஒரு தனியுடைமையான அல்லது இரகசியமான தகவல் உட்பட கூப்பர் ஸ்டாண்டர்ட் சொத்துகளை நாம் ஒருபோதும் எடுக்கவோ, கடனாகப் பெறவோ அல்லது தெரிந்தே அதைக் கையாடல் செய்வோ கூடாது.
- நம்முடைய சொத்துக்களை இழப்பு, சேதம், அங்கீகரிக்கப்படாத அல்லது முறையற்ற பயன்பாடு மற்றும் வீணடித்தல் ஆகியவற்றில் இருந்து நாம் பாதுகாக்க வேண்டும்.
- எப்போதும் தொழில்முறையிலும், சிந்தித்தும் தகவல் தொடர்புகளை மேற்கொள்ள வேண்டும்.
- செலவின அறிக்கைகளை துல்லியமாகவும், நேர்மையாகவும், உரிய நேரத்திலும் பூர்த்தி செய்ய வேண்டும்.



## தகவல் அமைப்புகள்

நம்முடைய தகவல் மற்றும் தொடர்பு அமைப்புகள் நாம் செயல்திறனுடனும், பயனுறும் வகையிலும் பணியாற்ற நமக்கு உதவும் இன்றியமையாத கருவிகளாக விளங்குகின்றன. இந்த அமைப்புகளைப் பயன்படுத்தும் போதெல்லாம் நாம் சிறந்த முடிவுகளைப் எடுத்து நிறுவனத்தின் கொள்கைகளைப் பின்பற்றுவது குறிப்பாக முக்கியமானதாகும்.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- நம்முடைய நிறுவனத்தின் தகவல் அமைப்புகளை பயன்படுத்தும் போது நாம் பொருத்தமான வகையிலும், நெறிமுறையாகவும், சட்டத்திற்கு உட்பட்டும் நடந்து கொள்ள வேண்டும்.
- எங்களுடைய தகவல் தொழில்நுட்ப அமைப்புகள், மின்னணு தகவல் தொடர்பு அமைப்புகள் மற்றும் அவற்றில் அடங்கியுள்ள அனைத்து தரவுகள் மற்றும் தகவல்கள் ஆகியவை நிறுவனத்தின் சொத்துக்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இதில் எங்களுடைய மின்னஞ்சல் அல்லது குரல் அஞ்சல் கணக்குகளுக்குள் உருவாக்கப்பட்ட, அனுப்பப்பட்ட, பெறப்பட்ட, செயலாக்கம் செய்யப்பட்ட, அணுகப்பட்ட அல்லது சேமிக்கப்பட்ட தனிப்பட்ட தகவல்கள் மற்றும் கடிதத்தொடர்புகள் உட்பட அனைத்து தகவல்களும், செய்திகளும் மற்றும் கடிதத்தொடர்புகளும் உள்ளடங்குகின்றன. ஊழியர்கள் நிறுவன அமைப்புகளில் அல்லது மடிக்கணினி, தொலைபேசி மற்றும் பிற அமைப்புகள் மற்றும் சாதனங்கள் போன்ற தொழில்நுட்பங்களில் உருவாக்கும், அனுப்பும், பெறும், செயலாக்கம் செய்யும், அணுகும் அல்லது சேமிக்கும் தகவல்களும் இதில் உள்ளடங்குகின்றன.
- நிறுவனத்தின் அமைப்புகளை வணிக நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்த வேண்டும் மற்றும் ஊழியரின் வேலை செய்யும் திறனில் தாக்கத்தை ஏற்படுத்தாத போது அல்லது நிறுவனத்தின் வணிகத்தில் குறுக்கிடாதபோது அல்லது மற்றவகையில் எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாட்டை மீறாத போது தனிப்பட்ட காரணங்களுக்காக மட்டும் இதைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.
- வலிமையான கடவுச்சொற்களை நாம் பயன்படுத்த வேண்டும் மற்றும் அவற்றை சகபணியாளர்களுடன் கூட நாம் பகிர்ந்துகொள்ளக்கூடாது.
- பொருத்தமற்ற, தொல்லைப்படுத்துகின்ற அல்லது அவமதிப்பான விஷயங்களை அனுப்பவோ அல்லது திறனாய்வு செய்யவோ அல்லது நிறுவனத்தையோ, அதன் தயாரிப்புபொருட்களையோ அல்லது சேவைகளையோ, வாடிக்கையாளர்களையோ அல்லது ஊழியர்களையோ இழிவுபடுத்தும் எந்தக் காரியத்தையும் செய்யவோ நிறுவனத்தின் அமைப்புகளை நாம் ஒருபோதும் பயன்படுத்தக்கூடாது.
- இணையதளங்களுக்கான அணுகலை தடுக்கவும், கோப்புகள் அனுப்புவதை கட்டுப்படுத்தவும் நிறுவனத்திற்கு உரிமை உண்டு என்பதையும் மற்றும் பொருந்தக்கூடிய சட்டங்களின் படி சொந்தமான, குத்தகைக்கு எடுக்கப்பட்ட அல்லது நிறுவனத்தால் கட்டுப்படுத்தப்பட்ட அனைத்து அமைப்புகள் அல்லது சாதனங்களின் பயன்பாட்டையும் ஆய்வு செய்யவும் கண்காணிக்கவும் நிறுவனத்திற்கு உரிமை உண்டு என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். நிறுவனத்தின் அமைப்புகளில் அல்லது சாதனங்களில் உருவாக்கப்பட்ட, அனுப்பப்பட்ட, பெறப்பட்ட, செயலாக்கம் செய்யப்பட்ட, அணுகப்பட்ட அல்லது சேமிக்கப்பட்ட தகவல்களில் நீங்கள் அந்தரங்க பாதுகாப்பை எதிர்பார்க்கக்கூடாது.

## நலன் சார்ந்த முரண்பாடுகள்

நம்முடைய தனிப்பட்ட விருப்பங்கள் அல்லது செயல்பாடுகள் கூப்பர் ஸ்டாண்டர்ட்-ன் விருப்பங்களில் குறுக்கிடும் நேரங்களும் அங்கு இருக்கக்கூடும். சில நேரங்களில் இந்தத் தனிப்பட்ட விருப்பங்கள் நம்முடைய சொந்த விருப்பங்களாகவோ அல்லது நம்முடைய குடும்ப உறுப்பினர்கள் அல்லது நெருங்கிய நண்பர்களின் விருப்பங்களாகவோ இருக்கக்கூடும். சில நேரங்களில் அந்தத் தனிப்பட்ட விருப்பங்கள் நிறுவனத்தின் விருப்பங்களில் குறுக்கிடுவதாக தோற்றமளிக்க மட்டும் செய்யக்கூடும். இவையனைத்தும் நலன் சார்ந்த முரண்பாடுகள் ஆகும் மற்றும் முரண்பாடுகள் ஏற்படும் போது அது குறித்து நிறுவனம் அறிந்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- நலன் சார்ந்த முரண்பாடுகளை எப்படி அடையாளம் கண்டுகொண்டு அவற்றைத் தவிர்க்க வேண்டும் என நாம் புரிந்துகொள்ள வேண்டும்.
- நிறுவனத்தின் சிறந்த நலன்களின் அடிப்படையில் வணிக முடிவுகளை எடுக்க வேண்டும்.
- வழங்குநர்களோடு, வாடிக்கையாளர்களோடு, போட்டியாளர்களோடு அல்லது கூப்பர் ஸ்டாண்டர்ட் உடன் வணிகத்தில் ஈடுபட்டுள்ள மற்றவர்களோடு நம்முடைய சார்பற்ற மற்றும் வலிமையான முடிவுகளை பாதிக்கும் வகையிலான உறவுகளை நாம் அனுமதிக்கக்கூடாது.
- தரநிலைப்படுத்தப்பட்ட சந்தைப்படுத்துதல் தொடர்பான பொருட்கள் அல்லது விருந்தோம்பல் ஆகியவற்றைத் தாண்டி கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் உங்கள் வேலை காரணமாக கிடைக்கப்பெறும் தாராளமான அல்லது பொருத்தமற்ற தனிப்பட்ட பலன்களை ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக்கூடாது (அல்லது உங்களுடைய குடும்ப உறுப்பினர்கள் அல்லது நெருங்கிய தனிப்பட்ட நண்பர்கள் இது போன்ற பலன்களை ஏற்றுகொள்ள அனுமதிக்கக்கூடாது).
- நலன் சார்ந்த எந்த முரண்பாடுகளையும், நலன் சார்ந்த முரண்பாடுகள் ஏற்படும் சாத்தியக்கூறுகளையும் உடனடியாக கடைபிடித்தலுக்கான தலைமை அலுவலரிடம் தெரிவிக்க வேண்டும்.



# நலன் சார்ந்த முரண்பாடுகள்: தோற்றங்கள் கவனத்துக்குரியவை

நாம் செய்யவே கூடாத குறிப்பிட்ட சில காரியங்கள் உள்ளன, ஏனென்றால் அவை நலன் சார்ந்த முரண்பாடுகளை அல்லது நலன் சார்ந்த முரண்பாடுகள் போன்று தோற்றமளிப்பவற்றை உருவாக்கும். அவற்றில் பின்வருபவைகளும் உள்ளடங்குகின்றன:

- நமது நிறுவனத்துடன் வணிகம் செய்யும் அல்லது வணிகம் செய்ய விரும்பும் நிறுவனத்திடமிருந்து அல்லது யாரேனும் ஒருவரிடமிருந்து நமக்காகவோ அல்லது நம்முடைய குடும்பத்திற்காகவோ கடன்களைப் பெறுதல்;
- நமது குடும்ப உறுப்பினர்களை அல்லது நாம் காதல் உறவில் இருக்கும் நபர்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மேற்பார்வையிடுதல்
- கூப்பர் ஸ்டாண்டர்ட் உடன் போட்டியிடும் அல்லது வணிகம் செய்ய விரும்பும் அல்லது வணிகம் செய்யும் ஒரு நிறுவனத்தை சொந்தமாக வைத்திருத்தல் அல்லது அந்த நிறுவனத்தின் ஒரு பகுதியை சொந்தமாக வைத்திருத்தல் அல்லது அந்த நிறுவனத்தோடு தனிப்பட்ட உறவுகளைக் கொண்டிருத்தல்
- கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் பணியாற்றுவதன் மூலம் நாம் அறிந்து கொள்ளும் தனிப்பட்ட வாய்ப்புகளைப் பயன்படுத்துதல்;
- தனிப்பட்ட பலன்களுக்காகவோ அல்லது தன்னார்வப் பணி அல்லது தொண்டு நிறுவனச் சேவை போன்ற வெளிப்புறச் செயல்பாடுகளுக்காகவோ நிறுவனத்தின் சொத்தை அல்லது தகவலை கடைபிடித்தலுக்கான தலைமை அலுவலரின் குறிப்பிட்ட முன் அனுமதி இன்றி பயன்படுத்துதல்;
- கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் நம்முடைய பணி சார்ந்த பொறுப்புகளில் குறுக்கிடும் வெளிப்புற பணியை அனுமதித்தல்;



*நாங்கள் உங்களை நம்பியிருக்கிறோம்: இவற்றையோ அல்லது எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாட்டின் வேறு எந்த விதிமீறல்களையோ நீங்கள் பார்த்தால், தயவுசெய்து நெறிமுறை தொடர்பான அறிக்கை ஆதார அமைப்புகளை தொடர்புகொள்ளவும்*

# இரகசியமான தகவல்

இரகசியமான தகவல்களை நாங்கள் பாதுகாப்பாக வைத்திருப்போம் என எங்களுடைய வாடிக்கையாளர்களும், எங்களுடைய வணிகப்பங்குதாரர்களும் மற்றும் எங்களுடைய ஊழியர்களும் எங்கள் மீது நம்பிக்கை வைத்துள்ளனர். இதற்கு நாம் அனைவரும் இரகசியமான தகவல்களைக் கவனமாக கையாள வேண்டும் என்பதும், அவற்றை அனைத்து நேரங்களிலும் விடாமுயற்சியுடன் பாதுகாக்க வேண்டும் என்பதும் அவசியமாக உள்ளது.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் வலியுறுத்துகிறது:

- தங்களுடைய வேலைகளைச் செய்வதற்கு இரகசியமான தகவல்கள் தேவைப்படாத மற்றவர்களுடன் அத்தகவல்களைப் பகிர்ந்துகொள்ளக்கூடாது.
- நிறுவனத்திற்கு வெளியே இரகசியமான தகவல்களை நாம் பகிர்ந்துகொள்ளும்போது சட்டத்துறையையோ அல்லது எங்களுடைய உள்ளூர் மனிதவளத் துறையையோ தொடர்பு கொள்ளவும்.
- இரகசியமான தகவல்களை அறிந்து கொள்ள உத்தேசிக்கப்படாத யாரேனும் ஒருவர் பார்க்கும் வகையில் அத்தகவல்களை நகல் எடுக்கும் இயந்திரம் அல்லது பகிர்ந்து கொள்ளப்படும் பகுதி போன்ற இடங்களில் விட்டுச் செல்லாதீர்கள் .
- மற்றவர்கள் நமது உரையாடலை கேட்க இயலும் ஒரு பொது இடத்தில் வைத்து இரகசியமான தகவல் குறித்து கலந்துரையாடாதீர்கள்.
- வேறு யாரேனும் ஒருவருக்கு அளிக்கப்பட வேண்டிய இரகசியமான தகவல்கள் தவறுதலாக பெறப்பட்டுவிட்டால், அதை முடிந்தவரை சீக்கிரமாக சட்டத்துறைக்குத் தெரிவிக்கவும் மற்றும் அதை முன்னோக்கி அனுப்பவோ அல்லது ஏதேனும் வகையில் அது போன்ற தகவல்களை பயன்படுத்தவோ கூடாது.
- இரகசியத் தன்மை குறித்த ஏதேனும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்கள் அந்த ஒப்பந்தங்களின் வரைமுறைகள் கடைபிடிக்கிறார்களா என்பதையும், கேள்விகள் அல்லது பிரச்சினைகள் தொடர்பாக அவர்கள் சட்டத்துறையைத் தொடர்பு கொள்கிறார்களா என்பதையும் உறுதி செய்து கொள்ளவும்.
- நிறுவனத்திற்கு வெளியே பொதுமக்களுக்கு ஏற்கனவே தெரிவிக்கப்படாத நிதி சார்ந்த தகவல்களைப் பகிர்ந்து கொள்ளக்கூடாது.

### இரகசியமான தகவல்: என்றால் என்ன?

நிறுவனம் குறித்தோ அல்லது நம்முடைய வாடிக்கையாளர்கள் குறித்தோ அல்லது நம்முடைய வணிகப் பங்குதாரர்கள் குறித்தோ இதுவரை பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படாத, பொதுவானது அல்லாத, இரகசியமான அல்லது தனியுரிமையான எந்தத் தகவலும் இரகசியமான தகவல் ஆகும். இது உதாரணமாகவும் மற்றும் வரம்பின்றியும் பின்வருவனவற்றை உள்ளடக்குகிறது:

- வணிக யுக்திகள் அல்லது திட்டங்கள்;
- நிறுவனத்தின் நிதி நிலைமை;
- முறைப்படியாக பிரசுரிக்கப்படாத நிறுவனத்தின் நிதி சார்ந்த தகவல்கள்;
- தொழில்நுட்பம், செயல்முறைகள் மற்றும் அமைப்புகள்;
- எங்கள் தயாரிப்புகள் மற்றும் தயாரிப்புகளுக்கான யுக்திகள் குறித்த தகவல்கள்; மற்றும்
- ஊழியர்களின் ஊதியம் சம்பந்தப்படாத தனிப்பட்ட தகவல்கள்.



# அறிவுசார் சொத்து

நாம் புதியவற்றை புனையும் போது நமது வாடிக்கையாளர்களுகான மிகச்சிறந்த தயாரிப்புப் பொருட்களையும், சேவைகளையும் நாம் உருவாக்குகிறோம். நம்முடைய அறிவுசார் சொத்தே நம்மைத் தனித்துவப்படுத்துகிறது, எனவே நாம் அவற்றை அனைத்து நேரங்களிலும் பாதுகாக்க வேண்டும். நாம் இணைந்து பணிபுரியும் அனைத்து மூன்றாம் தரப்பு நபர்களின் அறிவுசார் சொத்தையும் நாம் பாதுகாக்க வேண்டும்.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- அறிவுசார் சொத்தை எப்படி அடையாளம் காண வேண்டும் என்பதையும், அவற்றை எப்படி பாதுகாக்க வேண்டும் என்பதையும் நாம் புரிந்துகொள்ள வேண்டும்.
- ஒரு பொருத்தமான வெளியிடாமை ஒப்பந்தம் அமலில் இல்லாதவரை நிறுவனத்திற்கு வெளியே அறிவுசார் சொத்தை பகிர்ந்துகொள்ளக்கூடாது.
- நாம் இணைந்து பணியாற்றும் அனைவருடைய அறிவுசார்சொத்துக்களையும், காப்புரிமைகளையும் நாம் பாதுகாக்க வேண்டும்.
- நிறுவனத்தின் வணிகச் சின்னங்கள் மற்றும் பிற தயாரிப்புப் பொருட்களின் அடையாளச் சின்னங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தும் போது நிறுவனத்தின் வணிகச் சின்னம் தொடர்பான கொள்கையைப் பின்பற்ற வேண்டும்.
- எந்த ஒரு வெளியிடாமை ஒப்பந்தம் தொடர்பான நமது பொறுப்புகளுக்கும் அல்லது பிற ஒப்பந்தம் சார்ந்த பொறுப்புகளுக்கு நாம் மரியாதை அளிக்க வேண்டும் மற்றும் நமது சொந்தத் தகவல்களை நாம் பாதுகாக்க ஒரேமாதிரியான செயல்முறைகளைப் பின்பற்ற வேண்டும்.
- வாடிக்கையாளர் குறிப்பிடும் நோக்கத்திற்காக மட்டுமே ஒரு வாடிக்கையாளரின் இரகசியமான தகவல்களைப் பயன்படுத்த வேண்டும்.
- அனைத்து வணிகரீதியான மென்பொருட்களையும் வாங்க வேண்டும் அல்லது அவற்றிற்கு உரிமம் பெற வேண்டும் மற்றும் நகல் எடுப்பது வெளிப்படையாக அனுமதிக்கப்படாத வரை வணிகரீதியான மென்பொருளை நகல் எடுக்கக்கூடாது.
- ஏதேனும் ஒன்றை அறிவுசார் சொத்தாக கருதவேண்டுமா என்பது குறித்து உங்களுக்கு கேள்விகள் இருந்தால் சட்டத்துறையிடமிருந்து வழிகாட்டுதலை நாடவும்.
- அறிவுசார் சொத்துக்கு மரியாதை அளிக்கும் வழங்குநர்களோடு இணைந்து பணியாற்றவும்.

## அறிவு சார் சொத்து என்றால் என்ன

எங்களுடைய காப்புரிமைகள், பதிப்புரிமைகள், வணிகச்சின்னங்கள் மற்றும் வணிக இரகசியங்கள் ஆகியவை எங்களுடைய அறிவுசார் சொத்தில் உள்ளடங்குகின்றன. அதற்கான சில உதாரணங்களில் பின்வருபவை உள்ளடங்குகின்றன:

- தயாரிப்பின் வடிவமைப்புகள் மற்றும் வரைபடங்கள்;
- எங்கள் பொருட்கலவைகளின் செய்முறைகள்;
- புதிய தயாரிப்புக்கான ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு;
- தொழில்நுட்ப வடிவமைப்பு அல்லது செயல்முறைத் தரவுகள்;
- இரகசியமான செயல்முறைகள் மற்றும் செய்நுட்ப அறிவு; மற்றும்
- யுக்திக்கான திட்டங்கள்.



# சந்தையில் நேர்மையே எங்களை இயக்குகிறது

- சந்தைப்படுத்துதலுக்கான பொருட்கள்
- தனிப்பட்ட தரவுப் பாதுகாப்பு
- கவனமான தகவல் தொடர்பு
- சமூக ஊடகம்
- தயாரிப்புப் பொருளின் தரம்
- வணிக நம்பிக்கையின்மைமற்றும் நியாயமான போட்டி
- பணிக்கொடைகள் மற்றும் கேளிக்கை
- லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு
- வர்த்தக கட்டுப்பாடுகள்
- உள் வணிகம்



## சந்தைப்படுத்துதலுக்கான பொருட்கள்

நேர்மைக்கான எங்கள் பொறுப்புடைமையானது அனைத்து நேரங்களிலும் எங்களுடைய வாடிக்கையாளர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தி அதை பேணிப் பராமரிக்க எங்களை வலியுறுத்துகிறது. நியாயமற்ற, ஏமாற்றக்கூடிய அல்லது தவறாக வழிநடத்தக்கூடிய வகையில் எங்களுடைய தயாரிப்புகளை நாங்கள் ஒருபோதும் விளம்பரப்படுத்தமாட்டோம்.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- எங்களுடைய தயாரிப்புகள் குறித்து உண்மையான மற்றும் துல்லியமான தகவல்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் எங்கள் வாடிக்கையாளர்கள் தகவல்களின் அடிப்படையில் முடிவுகளை எடுக்க அவர்களுக்கு நாங்கள் உதவ வேண்டும்.
- வணிகத்தில் வெற்றிபெற ஒரு வாடிக்கையாளரை ஒருபோதும் தவறாக வழிநடத்த மாட்டோம் அல்லது வாடிக்கையாளரிடம் தகவல்களை ஒருபோதும் மறைக்க மாட்டோம்.
- நமது போட்டியாளர்களின் தயாரிப்புகள் மற்றும் சேவைகள் குறித்து தவறான தகவல்களை ஒருபோதும் அளிக்க மாட்டோம்.




## தனிப்பட்ட தரவுகளின் பாதுகாப்பு

கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் நாங்கள் எங்களுடைய வாடிக்கையாளர்களின், வழங்குநர்களின், சகபணியாளர்களின் மற்றும் நாங்கள் வணிகம் செய்யும் மற்ற அனைவரின் அந்தரங்கத்திற்கும் மதிப்பு அளிக்கிறோம் மற்றும் இதே மதிப்பை எங்கள் வழங்குநர்களும் அளிக்க வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். தனிப்பட்ட தகவல்களை நாம் எப்படி கையாள வேண்டும் என நமக்கு கூறும் பின்வரும் சட்டங்களைப் பின்பற்ற வேண்டும் என்பதே இதன் பொருளாகும். நாம் சேகரிக்கும், செயலாக்கம் செய்யும் மற்றும் சேமிக்கும் அனைத்து தகவல்களையும் பாதுகாக்க வேண்டும் என்பதும் இதன் பொருளாகும்.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- தரவுப் பாதுகாப்பு தொடர்பான ஒரு விதிமீறலை சரியான நபர்களிடம் தெரிவிப்பது உட்பட பொருந்தக்கூடிய அனைத்து தரவுப் பாதுகாப்பு மற்றும் அந்தரங்கம் தொடர்பான சட்டங்களைப் பின்பற்றி நாம் நடக்க வேண்டும்.
- ஊழியர்கள், வாடிக்கையாளர்கள், விற்பனையாளர்கள் அல்லது பிற வணிகப் பங்குதாரர்கள் குறித்த தனிப்பட்ட தகவல்களை அனுமதியின்றி ஒருபோதும் நாங்கள் பகிர்ந்து கொள்ள மாட்டோம்.
- நம்மீதுள்ள நம்பிக்கையால் நம்மிடம் அளிக்கப்பட்டுள்ள தனிப்பட்ட தகவல்களை (செயல்திறன்-நிர்வாகம் தொடர்பான ஆவணங்கள், ஊதியம் குறித்த தகவல்கள், செலவின அறிக்கைகள் அல்லது மருத்துவத் தகவல்கள்) பாதுகாக்க வேண்டும் மற்றும் அவை ஓர் அங்கீகரிப்படாத நபரால் அணுகப்படுவதைத் தடுக்க அவற்றை ஒரு பாதுகாப்பான இடத்தில் (நிறுவனத்தின் வலைத்தள இயக்ககம் போன்றவற்றில்) மட்டுமே சேமிக்க வேண்டும்.
- ஒரு பணியைப் பூர்த்திசெய்ய தேவைப்படாத பட்சத்தில் எந்த ஒரு நபரின் தனிப்பட்ட தகவலையும் ஒருபோதும் நாங்கள் அணுக மாட்டோம்.

## தனிப்பட்ட தகவல்கள்: என்றால் என்ன?

ஒரு தனிநபரை அடையாளம் காண உதவும் தகவல்களே தனிப்பட்ட தகவல்கள் ஆகும். அது எந்த வடிவிலும் இருக்கலாம் –காகித வடிவம், மின்னணு வடிவம் அல்லது சத்தமாக பேசியவை கூட – மற்றும் இதில் முழுப்பெயர்கள், முகவரிகள், மின்னஞ்சல் முகவரிகள், தொலைபேசி எண்கள், கடனட்டை தகவல்கள் மற்றும் பலவும் உள்ளடங்கும்.

## பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படாத தகவல்கள் என்றால் என்ன?

தனிப்பட்ட நபர்களின் தகவல்களை நாம் பாதுகாப்பது போன்று அறிவுசார் சொத்து, நமது நிதி சார்ந்த தாக்கல்களில் முறைப்படி வெளியிடப்படாத நிதிசார்ந்த தகவல்கள் மற்றும் வணிகம் குறித்த பிற பொருள் சார்ந்த தகவல்கள் உட்பட நிறுவனம் குறித்து பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படாத தகவல்களையும் நாம் பாதுகாக்க வேண்டும். ஒரு விரிவான புரிதலுக்கு இரகசியமான தகவல் (பக்கம்18), அறிவுசார் சொத்து(பக்கம்19), உள்வணிகம் (பக்கம் 30) மற்றும் பொருள் சார்ந்த தகவல் (பக்கம் 30) ஆகிய பிரிவுகளைப் பார்க்கவும்.

தகவல் தொடர்புத் துறை உட்பட சட்டத்துறையின் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனப் பிரதிநிதியின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதியின்றி சமூக ஊடகங்கள் உள்ளிட்ட எந்த வழியிலும் பின்வருவனவற்றைப் பகிரக்கூடாது:

- வணிக யுக்திகள் அல்லது திட்டங்கள்;
- நிறுவனத்தின் நிதி நிலைமை;
- வருமானம் குறித்த புள்ளிவிபரங்கள் மற்றும் போக்குகள் (டிரெண்டுகள்);
- முக்கிய நிர்வாகத்தில் செய்யப்படும் மாற்றங்கள்;
- உரிமை கோரும் வழக்குகள் குறித்த முக்கிய தகவல்கள்;
- கையகப்படுத்துதல்கள் மற்றும் விற்பனை;
- தொழில்நுட்பம், செயல்முறைகள் மற்றும் அமைப்புகள்;
- எங்கள் தயாரிப்புகள் மற்றும் தயாரிப்புகளுக்கான யுக்திகள் குறித்த தகவல்கள்; மற்றும்
- ஊழியர்களின் தனிப்பட்ட தகவல்கள்.

# கவனமான தகவல் தொடர்பு

எங்கள் நிறுவனம் குறித்த உண்மையான மற்றும் துல்லியமான தகவல்களைப் பகிர்ந்து கொள்ள எங்கள் வாடிக்கையாளர்களும், எங்கள் முதலீட்டாளர்களும், பொதுமக்களும் எங்களையே நம்பியுள்ளனர். எனவே தான் கூப்பர் ஸ்டாண்டர்ட் சார்பாக பேச குறிப்பிட்ட சில தனிநபர்களுக்கு மட்டுமே அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. எங்களுடைய செய்திகள் துல்லியமாகவும், முரண்பாடுகள் இன்றியும் இருப்பதை இது உறுதி செய்கிறது மற்றும் எங்களுடைய செய்திகள் ஓர் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனப் பிரதிநிதியால் அளிக்கப்படுவதையும் இது உறுதி செய்கிறது.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- கூப்பர் ஸ்டாண்டர்ட் சார்பாக பேசுவதற்கான தகவல்தொடர்புத் துறையின் அனுமதியின்றி சமூக ஊடகங்கள் உட்பட ஊடகத்திற்கோ, முதலீட்டாளர்களுக்கோ அல்லது பொதுமக்களுக்கோ எந்த விதமான தகவலையும் அனுப்பக்கூடாது அல்லது அவர்களோடு தகவல் தொடர்பு மேற்கொள்ளக்கூடாது.
- வழங்குநர் நற்சான்றிதழ் வழங்கும் கதைகளில் உள்ளடக்கப்பட பெருநிறுவன தகவல்தொடர்புத் துறையின் அனுமதியைப் பெறவும்.
- தனிப்பட்ட கணக்குகளில் நிறுவனத்தைக் குறிப்பிடும் போது சமூக ஊடகங்களுக்கான வழி காட்டுதலைப் பின்பற்றவும். மேலும் தகவல்களுக்கு பக்கம் 23 ஐப் பார்க்கவும்.
- நிறுவனம் குறித்த தகவலை ஊடகங்களில் உள்ள யாரேனும் ஒருவரோ அல்லது பொதுமக்களில் யாரேனும் ஒருவரோ கேட்டால் தகவல்தொடர்புத் துறையைத் தொடர்பு கொள்ளவும்.



## சமூக ஊடகம்

சமூக ஊடகத்தை பயன்படுத்தும் அனைத்து நேரங்களிலும் நாம் திறமையாகவும், சிந்தித்தும் செயல்பட வேண்டும் மற்றும் நம்முடைய சமூக ஊடகம் தொடர்பான கொள்கையைக் கடைபிடிக்க வேண்டும்.. ஆன்லைனில் நாம் கூறும் அல்லது செய்யும் எதுவும் நமது நிறுவனத்திற்கு, வாடிக்கையாளர்களுக்கு அல்லது சகபணியாளர்களுக்கு தீங்கு விளைவிக்கக்கூடாது. விரிவான புரிதலுக்கு, தயவுசெய்து இணையதளத்தில் இடுகையிடப்பட்டுள்ள கூப்பர் ஸ்டாண்டர்ட்-ன் சமூக ஊடகக் கொள்கையைப் பார்வையிடவும்.

நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:


- எப்போதும் தொழில்ரீதியாகவும், மரியாதையாகவும் இருக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்ளவும்.
- ஒவ்வொரு தனிநபரும் ஆன்லைனில் பதிவு செய்யும் விஷயத்திற்கு அத்தனிநபரே முழு பொறுப்பாவார் என்பதை நினைவில் கொள்ளவும்.
- நிறுவனத்தின் கணினிகளைப் பயன்படுத்தும் போது அதில் அந்தரங்கம் காக்கப்படும் என்ற எதிர்பார்ப்பு இருக்கக்கூடாது என்பதையும் மற்றும் நிறுவனம் அதன் கணினிகளிலும், உபகரணங்களிலும் மேற்கொள்ளப்படும் அனைத்து செயல்பாடுகளையும் ஆய்வு செய்யக்கூடும் அல்லது கண்காணிக்கக்கூடும் என்பதையும் நினைவில் கொள்ளவும்.
- சமூக ஊடகத்தை பொறுப்புடன் பயன்படுத்த வேண்டும்: இழிவுபடுத்தும் அல்லது மனதைப் புண்படுத்தும் விஷயங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன.
- சமூக ஊடகமானது பணியில் குறுக்கிடாமல் இருக்கும் பட்சத்தில் மட்டுமே அல்லது நியாயமற்ற வகையில் நேரத்தை எடுத்துக்கொள்ளாத பட்சத்தில் மட்டுமே பணியின் போது சமூக ஊடகங்களைப் பயன்படுத்த வேண்டும்.
- கூப்பர் ஸ்டாண்டர்ட் குறித்த அல்லது , எங்களுடைய வாடிக்கையாளர்கள் அல்லது வழங்குநர்கள் குறித்த இரகசியமான அல்லது பொதுமக்களுக்குத் தெரிவிக்கப்படாத தகவல்களை ஒருபோது பகிரக்கூடாது. மற்றவர்களின் அந்தரங்கத்திற்கு மரியாதை அளிக்க வேண்டும் மற்றும் அவர்களுடைய பதிவுகள் அல்லது ஆவணங்களை அனுமதியின்றி ஆன்லைனில் பகிரக்கூடாது.
- பணிக்கு வெளியே சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் போது உங்களுடைய எந்த ஓர் பதிவும் நிறுவனத்தின் கருத்துக்களை எந்த வகையிலும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் அமையக்கூடாது அல்லது நிறுவனத்தின் சார்பாக பேசுவதாக இருக்கக்கூடாது என்பதைத் தெளிவாக உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- கூப்பர் ஸ்டாண்டர்ட் சார்பாக எதைக் குறித்தும் கருத்து தெரிவிக்கவோ அல்லது பதிவு செய்ய (post) ஊழியர்களுக்கு அனுமதி இல்லை என்பதை நினைவில் கொள்ளவும். பெருநிறுவன தகவல் தொடர்புத் துறையினர் மற்றும் குறிப்பிட்ட பணிக்காக நியமிக்கப்பட்ட நபர்கள் ஆகியோர் மட்டுமே அலுவலக ரீதியான தகவல் தொடர்புகளை இடுகையிட அனுமதிக்கப்படுகிறார்கள். கூப்பர் ஸ்டாண்டர்ட் நிறுவனத்தின் அனைத்து சமூக ஊடகச் சேனல்களுக்கும் பெருநிறுவன தகவல் தொடர்புத் துறையால் அனுமதி அளிக்கப்பட வேண்டும்.

### சமூக ஊடகம் என்றால் என்ன?

“சமூக ஊடகம்” என்று நாங்கள் கூறும் போது, சமூக வலைத்தளங்கள், வலைப்பூக்கள், கருத்துக்கள், அரட்டை அறைகள் மற்றும் இணையதளங்கள் உள்ளிட்ட அனைத்து ஆன்லைன் கருத்துப் பரிமாற்றங்களையும் நாங்கள் அர்த்தத்தில் எடுத்துக்கொள்கிறோம். நாம் பதிவு செய்யும் படங்கள் மற்றும் மறு பதிவு செய்யும் மற்றும் மற்ற நபர்களின் பதிவு களுக்கு வரப்பெறும் எதிர்விளைவுகள் ஆகியவற்றிற்கும் நம்முடைய நன்னடத்தைக் கோட்பாடு பொருந்தும்.

# சமூக ஊடகம்: கண்ணியமாகவும், நேர்மையாகவும் மற்றும் கவனமாகவும் இருக்கவும்.

சமூக ஊடகத்தைப் பொறுப்புடன் பயன்படுத்துதல் என்பதன் அர்த்தம் என்னவென்றால் உங்களுடைய இடுகைகள் உங்களைச் சுற்றியுள்ளவர்களை எப்படி பாதிக்கக்கூடும் என சிந்தனை செய்வதே ஆகும். உங்களுடைய வார்த்தைகள் முரட்டுத்தனமாகவும், அவமதிக்கும் வகையிலும் அல்லது வணிகரீதியில் இல்லாமலும் இருக்கிறதா? நீங்கள் கவனக்குறைவாக இரகசியமான தனியுரிமைத் தகவல்களை வெளிப்படுத்துவீர்களா? பெருநிறுவன தகவல் தொடர்புத் துறையிலிருந்து அனுமதியைப் பெறாமல் நிறுவனத்தின் சார்பாக ஒருபோதும் பேசாதீர்கள்.



**பச்சை விளக்கு: பகிர்வதற்கு சரியானவை**

உங்களை மட்டும் உள்ளடக்கிய தனிப்பட்ட கதைகள் மட்டும்.

**மஞ்சள் விளக்கு: பகிர்வதற்கு முன்பாக சிந்திக்கவும்**

நிறுவனத்தை அல்லது அதன் வாடிக்கையாளர்களை, வழங்குநர்களை அல்லது ஊழியர்களைக் காயப்படுத்தும் கதைகள்.

நிறுவனத்தின் விற்பனைப் பொருளை நீங்கள் அணிந்து கொண்டிருக்கும் புகைப்படங்கள் அல்லது எதிர்பாராத விதமாக இரகசியத் தகவல்களை பகிரக்கூடும் நிறுவனப் பகுதியில் எடுக்கப்பட்ட உங்கள் புகைப்படங்கள்.

**சிவப்பு விளக்கு: ஒருபோதும் பகிரக்கூடாது**

முரட்டுத்தனமான அல்லது மரியாதைக் குறைவான அறிக்கைகள்.

நிறுவனம், அதன் வாடிக்கையாளர்கள் அல்லது வழங்குநர்கள் குறித்த இரகசியமான தகவல்கள்.

மற்றொரு ஊழியர் அல்லது வழங்குநர் குறித்த ஊதியம் சம்பந்தப்படாத தனிப்பட்ட தகவல்கள்.

கூப்பர் ஸ்டாண்டர்ட் அல்லது ஒரு மூன்றாம் தரப்பினருக்குச் சொந்தமான அறிவுசார் சொத்து.

## தயாரிப்புப் பொருளின் தரம்

கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் தரமே எங்களுடைய முக்கியமான மதிப்பீடுகளில் ஒன்றாக இருக்கிறது. எங்களுடைய தயாரிப்புகளில் காட்டப்படும் நேர்மையானது எங்களுக்கும், எங்களுடைய வெற்றிக்கும் மிகவும் முக்கியமானதாகும். நாங்கள் எங்கள் வாடிக்கையாளர்களுக்கும், வணிகப் பங்குதாரர்களுக்கும் பாதுகாப்பான, உயர்தரத்திலான தயாரிப்புகளை வழங்குகிறோம். எங்களுக்குப் பொருந்தக்கூடிய அனைத்து பெடரல் தேவைகளையும் மற்றும் வாடிக்கையாளர் பாதுகாப்பு மற்றும் தரம் ஆகியவற்றிற்கான தேவைகளையும் நாங்கள் பூர்த்தி செய்வதை உறுதி செய்ய எங்களிடம் செயல்முறைகளும், கட்டுப்பாடுகளும் அமலில் உள்ளன. தங்களுடைய தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் தரத்திற்கு உத்திரவாதம் அளிக்கும் வழங்குநர்களோடு மட்டுமே நாங்கள் பணிபுரிவோம் மற்றும் எங்களுடைய வழங்குநர்களை எங்களுடைய உயர்ந்த தரநிலைகளுக்கு பதில் சொல்லும் பொறுப்பு கொண்டவர்களாக நாங்கள் வைத்திருக்கிறோம்.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- நமது பணி சார்ந்த பொறுப்புகளுக்கு பொருந்தக்கூடிய தேவைகள் மற்றும் கட்டுப்பாடுகள் ஆகியவற்றை புரிந்து கொண்டு அவற்றிற்கு இணங்கி நடக்க வேண்டும்.
- தயாரிப்பின் அனைத்து விவரக்குறிப்புகளையும் பின்பற்ற வேண்டும்.
- உற்பத்தி செயல்முறைகளையும், தரக்கட்டுப்பாட்டு செயல்முறைகளையும் பின்பற்றி நடக்க வேண்டும்.
- நாங்கள் வழங்குநர்களைத் தேர்ந்தெடுக்கும்போதெல்லாம் நேர்மைக்கும், எங்களுடைய தயாரிப்புகளின் தரத்தின் மீது நாங்கள் கொண்டுள்ள பொறுப்புடைமைக்கும் முன்னுரிமை அளிக்கப்படும்.
- ஒரு தயாரிப்பில் அல்லது சேவையில் பொருந்தக்கூடிய சட்டங்கள், செயல்முறைகள் அல்லது உட்புறக் கட்டுப்பாடுகள் பின்பற்றப்படவில்லை என்ற கவலைகள் நம்மிடம் இருந்தால் அதுகுறித்து நாம் பேச வேண்டும்.
- நமது வழங்கல் சங்கிலியில் போலித் தயாரிப்புகளை அகற்ற நமது அதிகாரத்தில் உள்ள உள்ள அனைத்தையும் செய்ய வேண்டும்.
- அனைத்து சோதனைத் தரவுகளின் துல்லியத்தன்மையையும், நேர்மையையும் உறுதி செய்ய வேண்டும்.



# நம்பிக்கையின்மை மற்றும் நியாயமான போட்டி

எங்களுடைய உலகத்தரத்திலான தயாரிப்புகளின் தரம் மற்றும் மதிப்பு ஆகியவற்றின் வழியாகவே நாங்கள் வணிகத்தைப் பெறுகிறோம் மற்றும் நாங்கள் நியாயமற்ற வணிக நடைமுறைகள் மூலம் வணிகத்தைப் பெறுவதில்லை. வாடிக்கையாளர்களைப் பாதுகாக்கவும், சந்தைகளைப் போட்டிக்குரியதாக வைத்திருக்கும் பொருட்டும் வடிவமைக்கப்பட்ட யு.எஸ்-ன் வணிகப்போட்டிக்கான நம்பிக்கையின்மை சட்டங்கள் உட்பட உலகெங்கிலும் பல சட்டங்கள் உள்ளன. இவை சிக்கலானவையாக இருக்கக்கூடும் மற்றும் இவை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு மாறுபடக்கூடும். நாங்கள் எங்கு வணிகம் செய்தாலும் அனைத்து நேரங்களிலும் இந்தச் சட்டங்களை நாங்கள் கடைபிடிக்கிறோம் மற்றும் இதையே நாங்கள் எங்கள் வழங்குநர்களிடமும் எதிர்பார்க்கிறோம்.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- தேவையாக இருக்கும் வரம்புக்குட்பட்ட சூழ்நிலைகளிலும் மற்றும் சட்டத்தால் அனுமதிக்கப்படும் காரணங்களுக்காகவும் தவிர மற்ற நேரங்களில் நமது போட்டியாளர்களின் ஊழியர்களோடு உள்ள தொடர்பை தவிர்க்கவும்.
- பின்வரும் விஷயங்களை ஒருபோதும் போட்டியாளர்களுடன் விவாதிக்கக் கூடாது: விலைகள் அல்லது விலை-தொடர்பான தகவல்கள், ஏலங்கள் அல்லது கருத்துருக்கள் தொடர்பான தகவல்கள், சந்தைகளின் பிரிவு அல்லது ஒதுக்கீடு அல்லது எந்த ஒரு மூன்றாம் தரப்போடும் எங்களுக்கு உள்ள வணிகத் தொடர்புகள்.
- முன்பு ஒரு போட்டியாளருக்காக பணி செய்த ஊழியர்களின் வெளியிடாமை ஒப்பந்தங்களுக்கு மதிப்பளிக்கவும்.
- போட்டியைக் கட்டுப்படுத்தும் விதத்தில் போட்டியாளருடன் ஓர் ஒப்பந்தத்தை ஒருபோதும் மேற்கொள்ளாதீர்கள்.
- போட்டியாளர்கள் குறித்த தகவல்களை நியாயமாகவும், முறையான சேனல்கள் வழியாகவும் சேகரிக்கவும் மற்றும் அவற்றை ஒருபோதும் லஞ்சம் அல்லது திருட்டு மூலம் சேகரிக்காதீர்கள்.
- வாடிக்கையாளர்களாகவும் அல்லது போட்டியாளர்களாகவும் இருக்கும் விற்பனையாளர்களுடன் ஏற்பாடுகளை செய்துகொள்ளும் போது சட்டத்துறையிலிருந்து வழிகாட்டுதலை நாடவும்.
- வர்த்தக சங்கக் கூட்டங்களில் கலந்துகொள்ளும் போது குறிப்பாக வணிகப்போட்டிக்கான சட்டங்களை முறைப்படுத்தும் விதிகள் மற்றும் கொள்கைகள் குறித்து கவனமாக இருக்கவும்.
- ஒரு போட்டியாளருடன் ஏதேனும் ஒரு ஒப்பந்தத்திற்குள் நுழைவது குறித்து உங்களை அணுகினால் சட்டத்துறையை தொடர்பு கொள்ளவும்.

## தடை செய்யப்பட்ட ஒப்பந்தங்கள் - அவை என்னென்ன?

நியாயமான போட்டியைக் கட்டுப்படுத்தும் அல்லது சர்வதேச ஒப்பந்தங்களை அல்லது நேர்மைக்கான எங்கள் நிறுவனத்தின் பொறுப்புடைமையை மீறும் நோக்கில் அமைந்த ஒப்பந்தங்கள் தடைசெய்யப்பட்ட ஒப்பந்தங்கள் ஆகும். இதில் பின்வருபவை உள்ளடங்குகின்றன:

- விலைகளை முடிவு செய்வதற்கான அல்லது பராமரிப்பதற்கான ஒப்பந்தங்கள்;
- விலை வரையறைகள் அல்லது விற்பனையின் பிற நிபந்தனைகள் குறித்த ஒப்பந்தங்கள்;
- குறிப்பிட்ட சில வாடிக்கையாளகளுக்கு யார் விற்பனை செய்ய வேண்டும் அல்லது குறிப்பிட்ட சில பகுதிகளுக்குள் யார் விற்பனை செய்ய வேண்டும் அல்லது குறிப்பிட்ட சில தயாரிப்புகளை யார் விற்பனை செய்ய வேண்டும் என்பது குறித்த ஒப்பந்தங்கள்; மற்றும்
- குறிப்பிட்ட சில வழங்குநர்களுடன் அல்லது வாடிக்கையாளர்களுடன் வணிகத்தொடர்பு மேற்கொள்ள மறுக்கும் ஒப்பந்தங்கள்.




## பணிக்கொடைகள் மற்றும் கேளிக்கை

கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் பொருத்தமான பரிசுகளும், கேளிக்கையும் தொழில்முறையிலான உறவுகளை மேம்படுத்த உதவி செய்யும் என்பதை நாங்கள் கண்டுணர்கிறோம் மற்றும் இதில் எங்கள் ஊழியர்கள் பொது அறிவையும் சிறந்த மதிப்பீட்டையும் பயன்படுத்த வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம். பரிசுகளை அளிப்பதோ அல்லது மக்களுக்கு கேளிக்கைகளை வழங்குவதோ வலிமையான, பாரபட்சமற்ற வணிக முடிவுகளை எடுக்கும் நமது திறமையில் சமரசத்தை ஏற்படுத்தக்கூடாது அல்லது சமரசத்தை ஏற்படுத்துவது போன்ற தோற்றத்தைக் கூட உருவாக்கக்கூடாது.

**நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:**

- ஒரு வணிக முடிவில் தாக்கத்தை ஏற்படுவதற்காக பரிசுகளை அளிக்கக்கூடாது. யாரேனும் ஒருவர் உங்களுடைய முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்த முயற்சி செய்வதாக நீங்கள் சந்தேகித்தால் அவர் அளிக்கும் பரிசுகளை ஏற்றுக்கொள்ளாதீர்கள்.
- நிறுவனத்தின் கொள்கையின் படி அனைத்து பரிசுகளையும் செலவின அறிக்கையில் பதிவு செய்யவும்.
- ஒரு பரிசை வாங்க மறுப்பதற்கு நீங்கள் அசௌகரியமாக உணர்ந்தாலோ அல்லது அவ்வாறு வாங்க மறுப்பது அதை அளிக்கும் நபரைப் புண்படுத்தக்கூடும் என்ற கவலை உங்களுக்கு இருந்தாலோ அது குறித்து ஒரு மேற்பார்வையாளரிடம் பேசவும்.
- குறிப்பிட்ட சில பரிசுகள் அல்லது கேளிக்கைகள் பொருத்தமானவையா என்பது குறித்து உங்களுக்கு நிச்சயமில்லாமல் இருந்தால் எப்போதும் அது குறித்து ஒரு மேற்பார்வையாளரிடம் கேட்கவும்.
- பரிசுகளும், கேளிக்கைகளும் பின்வருமாறு இருக்க வேண்டும் என்பதை நினைவில்கொள்ளவும்:
- ஏற்றுக்கொள்ளப்பட்ட வணிக நடைமுறையுடன் முரண்படாமல் இருக்க வேண்டும்;
- சிறிய மதிப்பு கொண்டதாக இருக்க வேண்டும்;
- நல்ல ரசனையுடன் இருக்க வேண்டும்;
- அடிக்கடி அளிக்கப்படுவதாக இருக்கக்கூடாது;
- கோரப்படாததாக இருக்க வேண்டும்;
- பணமாகவோ அல்லது பணத்திற்கு ஈடானவைகளாகவோ இருக்கக்கூடாது; மற்றும்
- பரிசானது பகிங்கரமாக வெளிப்படுத்தப்படும் பட்சத்தில் அது வாங்குபவரையோ அல்லது நிறுவனத்தையோ சங்கடத்திற்கு உள்ளாக்கக்கூடாது.

# சரியான பரிசுகளை அளித்தல், பச்சை விளக்கு



**பச்சை விளக்கு: இந்தப் பரிசுகள் பொதுவாக சரியானவையாக இருக்கும்:**

- வணிகம் தொடர்பான கலந்துரையாடல் மேற்கொள்ளப்படும் இடத்தில் நியாயமான விலை கொண்ட மதிய உணவு;
- பேனாக்கள், குவளைகள் அல்லது நாட்காட்டிகள் போன்ற வணிகத்தை ஊக்குவிப்பதற்கான பொருட்கள்;
- ஊழியர்களிடையே பகிர்ந்து கொள்ளப்படும் நோக்கில் பெறப்படும் விரைவில் கெட்டுவிடும் பொருட்கள் (உ.ம். பரிசுக் கூடைகள், விடுமுறை குக்கீஸ்); மற்றும்
- ஒரு விடுமுறையை அல்லது ஒரு சிறப்பு நிகழ்ச்சியை கொண்டாடுவதற்கான சிறிய பூங்கொத்து.

**மஞ்சள் விளக்கு: இந்தப் பரிசுகள் பொதுவாக சரியானவை அல்ல:**

- டிக்கெட்டுகள் அனைத்தும் விற்றுத்தீர்ந்த ஓர் இசை நிகழ்ச்சிக்கான அல்லது விளையாட்டு நிகழ்ச்சிக்கான விலையுயர்ந்த டிக்கெட்டுகள்;
- ஒயின் பாட்டில்கள் நிரம்பிய கூடை; மற்றும்
- ஒரு வாடிக்கையாளருக்காக அல்லது ஒரு வாடிக்கையாளருடன் ஆடம்பரமான வார இறுதி நாள் கொண்டாட்டம்.

**சிவப்பு விளக்கு: இந்தப் பரிசுகள் ஒருபோதும் சரியானவை அல்ல:**

- பணம் அல்லது பரிசு அட்டைகள், கடன்கள் அல்லது பங்குகள் போன்ற பணத்திற்கு ஈடான பொருட்கள்;
- உயர் மதிப்பு கொண்ட ஆடம்பர பொருட்கள் (உ.ம்.,டிசைனர் பிராண்டுகள், விளையாட்டு உபகரணம், மது);
- நீட்டிக்கப்பட்ட பயணங்கள் அல்லது சுற்றுலாக்கள்;
- பொருத்தமற்றதாக உணரப்படும் கேளிக்கை; மற்றும்
- வாங்குபவரின் பரிசுப்பொருள் கொள்கைகளை மீறும் வகையில் அமைந்த பரிசுப்பொருட்கள் அல்லது கேளிக்கை.

# லஞ்ச ஒழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு

கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் லஞ்சம் வாங்கும் நடத்தைக்கு எந்த வித இடமும் கிடையாது. எங்கு நாங்கள் வணிகம் செய்தாலும் மற்றும் யாருடன் நாங்கள் வணிகம் செய்தாலும் நாங்கள் லஞ்சம் கொடுக்கவோ அல்லது வாங்கவோ மாட்டோம். இது உலகெங்கிலும் உள்ள எங்கள் ஊழியர்களுக்கும், எங்கள் வழங்குநர்களுக்கும் மற்றும் எங்கள் சார்பாக வணிகம் செய்யும் எவருக்கும் பொருந்தும்.

## நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- ஒரு வணிகம் சார்ந்த முடிவில் தாக்கத்தை ஏற்படுத்தவோ, வணிகத்தைப் பெறவோ அல்லது தக்கவைக்கவோ அல்லது ஒரு நியாமற்ற அனுகூலத்தைப் பெறவோ ஒருபோதும் பணத்தை அளிக்கவோ, அல்லது பணம் அளிப்பதை அனுமதிக்கவோ அல்லது மதிப்புவாய்ந்த ஏதேனும் ஒன்றை அளிக்கவோ கூடாது.
- ஒரு வழங்குநரிடமிருந்து அல்லது வாடிக்கையாளரிமிருந்து ஒருபோதும் பணத்தையோ அல்லது பணத்திற்கு ஈடானவற்றையோ தனிப்பட்ட முறையில் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளக்கூடாது.
- நமது ஊழியர்கள் ஒருபோதும் வாடிக்கையாளர்களுடனான தங்களுடைய உறவை தங்களுடைய தனிப்பட்ட பலனுக்காக ஒருபோதும் பயன்படுத்தாமல் இருப்பதை உறுதி செய்யவும்.
- கூப்பர் ஸ்டாண்டர்ட் ஆல் நேரடியாக பணியமர்த்தப்படாத முகவர்கள் உட்பட எங்களுக்காக பணியாற்றும் நபர்களைக் கண்காணிக்க வேண்டும் மற்றும் அவர்களுடைய செயல்பாடுகளுக்கு நமது நிறுவனம் பொறுப்பாகக்கூடும் என்பதை நினைவில் கொள்ளவும்.
- அனைத்துப் பரிமாற்றங்களையும், பணமளிப்புகளையும் துல்லியமாகவும், உண்மையாகவும் பதிவு செய்யவும். ஒரு பணமளிப்பை ஒருபோதும் மறைக்கவோ அல்லது மறைக்க முயற்சி செய்யவோ கூடாது.
- அரசு ஊழியர்கள் மற்றும் அலுவலர்களை நாம் கையாளும் போது சிறப்பு விதிகள் பொருந்தும் என்பதை மனதில் கொள்ளவும் மற்றும் அவ்வாறு கையாளும் போது சட்டத்துறையின் வழிகாட்டுதலை நாடவும்.

## செயல்களை எளிதாக்குவதற்கான பணமளிப்புகள்: வர்த்தக கட்டுப்பாடுகள் என்றால் என்ன?

செயல்களை எளிதாக்குவதற்கான பணமளிப்புகள் என்பது வணிகத் தயாரிப்புகளை சுங்கத்துறையின் வழியாக கடந்து போகச் செய்தல் அல்லது ஓர் அனுமதி, உரிமம் அல்லது பிற அலுவலகரீதியான ஆவணத்தைப் பெறுதல் போன்ற வழக்கமான குறிப்பிட்ட சில வணிகச் செயல்பாடுகளை வேகப்படுத்த அல்லது எளிதாக செய்து முடிக்க கீழ்நிலை அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படும் சிறிய அளவு பணம் ஆகும்.

யாரேனும் ஒருவருடைய உயிருக்கு ஆபத்து ஏற்படுதல் போன்ற அரிதான சூழ்நிலைகளைத் தவிர மற்ற நேரங்களில் கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் இந்தப் பணமளிப்புகளை நாங்கள் தடைசெய்கிறோம். இது போன்ற ஒரு நிகழ்வு ஏற்பட்டால் அது குறித்து உடனடியாக நிறுவனத்தின் கடைபிடித்தலுக்கான தலைமை அலுவருக்கோ அல்லது உலகளாவிய நெறிமுறை மற்றும் அதைக் கடைபிடித்தலுக்கான குழுவிற்கு அறிக்கை அளிக்கவும். கடைபிடித்தலுக்கான தலைமை அலுவலரின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதியின்றி செயல்களை எளிதாக்குவதற்கான பணமளிப்புகள் அளிக்கப்படலாம்.



# லஞ்சம்: எதைக் கண்காணிக்க வேண்டும்



ஒரு சாதகமான வணிகம் சார்ந்த பலனைப் பெறுவதற்காக அல்லது செல்வாக்கினால் பெறுவதற்காக முடிவு எடுக்கும் ஒரு நபருக்கு மதிப்புமிக்க ஏதேனும் ஒன்றை அளிப்பது அல்லது சலுகையாக அளிப்பது லஞ்சம் என வரையறுக்கப்படுகிறது. லஞ்சம் போன்ற தோற்றத்தை அளிக்கும் எந்த ஒரு நடவடிக்கையையும் நாங்கள் எப்போதுமே தவிர்க்கிறோம்- நிறுவனத்தின் சார்பாக எந்த ஒரு பதவியிலும் பணியாற்றும் மூன்றாம் தரப்பு நபர்களால் எடுக்கப்படும் நடவடிக்கைகளும் இதில் உள்ளடங்குகின்றன.

ஒரு மூன்றாம் தரப்பு நபரோடு நீங்கள் பணியாற்றிக்கொண்டிருந்தால் லஞ்சத்திற்கான சிவப்புக் கொடிகள் காட்டப்படுகின்றனவா எனக் கண்காணிக்கவும்:

- வாடிக்கையாளருடன் அல்லது வாய்ப்பு வளங்களுடன் தனிப்பட்ட தொடர்பு இருப்பதற்கான ஆதாரம்;
- ஒரு தனிப்பட்ட பலனாக உருமாறக்கூடிய தெளிவற்ற செலவுகள்;
- “முகவர் சேவைக் கட்டணங்களில்” அல்லது “சந்தைப்படுத்துதலுக்கான கட்டணங்களில்” விவரிக்கமுடியாத (அல்லது நன்றாக விவரிக்க இயலாத) அதிகரிப்பு;
- அவர்கள் என்ன செய்யப்போகிறார்கள் என்பது குறித்து தெளிவான விளக்கம் ஏதும் இல்லாமல் ஒரு பேரத்தில் அதிகமான நபர்களை (ஆலோசகர்கள் அல்லது துணை ஒப்பந்தக்காரர்கள் போன்று) சேர்த்தல்; மற்றும்
- உள்ளூர் தொண்டு நிறுவனங்களுக்கு அல்லது சமூகத்திற்கு (பள்ளிக்கூடங்கள், பூங்காக்கள் மற்றும் பல) பங்களிப்புத் தொகைகளை அளித்தல்.

*நாங்கள் உங்களை நம்பியிருக்கிறோம்: இவற்றையோ அல்லது எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாட்டின் வேறு எந்த விதிமீறல்களையோ நீங்கள் பார்த்தால், தயவுசெய்து நெறிமுறை தொடர்பான அறிக்கை ஆதார அமைப்புகளை தொடர்புகொள்ளவும்*

# வர்த்தக கட்டுப்பாடுகள்

அனைத்து இடங்களிலும் எங்களைப் போன்ற நிறுவனங்கள் சர்வதேச எல்லைகளுக்கு நெடுகே சரக்குகளையும், சேவைகளையும் எவ்வாறு வாங்குகிறது மற்றும் விற்கிறது என்பதை அரசாங்கங்கள் ஒழுங்குமுறைப்படுத்துகின்றன. நமது நிறுவனம் பல நாடுகளில் இயங்கி வருவதால் நாம் பணியாற்றும் அனைத்து இடங்களிலும் நாமும், நம்முடைய வழங்குநர்களும் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் அது தொடர்பான செயல்பாடுகள் குறித்து புரிந்துகொண்டு விதிகளைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

இந்த விதிகள் சிக்கலானவை மற்றும் விரைவாக மாறக்கூடியவை ஆகும் மற்றும் இவை நாட்டிற்கு நாடு மாறுபடக்கூடியவை ஆகும். இவற்றை மீறுவது நமது நிறுவனத்திற்கும் நமது ஊழியர்களுக்கும் அதிகமான அபாரதங்கள் விதிக்கப்படுவதற்கு வழிவகுக்கும். நமது நிறுவனத்தின் சார்பாக பணியாற்றும் எவரும் இந்த விதிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதை நினைவில் கொள்வது முக்கியமானதாகும்.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- நாடுகளின் எல்லைகளுக்கு குறுக்கே சரக்குகளை அல்லது சேவைகளை நகர்த்திச் செல்லும் எந்தப் பணியையும் மேற்கொள்ளும் போது ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பான விதிகளைப் புரிந்துகொள்ள வேண்டும்.
- அரசாங்க அதிகாரிகளுக்கு அளிக்கப்படும் எந்த ஒரு தகவலும் உண்மையானதாகவும், துல்லியமானதாகவும் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- யு.எஸ் அரசாங்கத்தால் தடை விதிக்கப்பட்ட நாடுகளுடன் வணிகம் செய்யக்கூடாது.
- நாம் யாருடன் வணிகம் செய்ய இயலாது என்பதை நமக்கு காண்பிக்கும் “தடைசெய்யப்பட்ட தரப்பினர்களின்” பட்டியல்கள் குறித்து அறிந்திருக்க வேண்டும்.
- ஒப்பந்தங்கள், கொள்முதல் ஆணைகள், சரக்கு அனுப்பும் ஆவணங்கள் ஆகியவற்றில் புறக்கணிப்பு எதிர்ப்புச் சட்டங்களை மீறும் வார்த்தைகள் உள்ளனவா என்பதைக் கண்காணிக்க வேண்டும். அதுபோன்ற வார்த்தை இருந்தால், அது குறித்து உடனடியாக சட்டத்துறைக்கு தெரிவிக்கவும்.

### வர்த்தக கட்டுப்பாடுகள்: வர்த்தக கட்டுப்பாடுகள் என்றால் என்ன?

**ஏற்றுமதி மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள்**: எங்களுடைய தயாரிப்புகள், சேவைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் ஆகியவற்றின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதியில் பல ஒழுங்குமுறைகளும், கட்டுப்பாடுகளும் உள்ளன. இராணுவ நிறுவனங்களால் பயன்படுத்தப்படக்கூடிய தயாரிப்புகளுக்கு சிறப்புக் கட்டுப்பாடுகள் பொருந்தும்.

**புறக்கணிப்பு எதிர்ப்புச் சட்டங்கள்**: யுனைட்டெட் ஸ்டேட்ஸ்-ல் யுனைடெட் ஸ்டேட்ஸ் ஆல் புறக்கணிக்கப்படாத ஒரு வெளிநாட்டைப் புறக்கணிக்கும் செயலை ஆதரிப்பது சட்டவிரோதமானதாகும்.

**பொருளாதாரத் தடைகள் மற்றும் தடையாணைகள்** : குறிப்பிட்ட சில நாடுகளுடனும், தனிநபர்களுடனும் வர்த்தகம் செய்வதை நாங்கள் பணியாற்றும் யுனைடெட் ஸ்டேட்ஸ் மற்றும் பிற நாடுகளின் சட்டங்கள் சட்டத்திற்கு புறம்பானதாக கருதுகின்றன. கட்டுப்படுத்தப்பட்ட ஒரு நபருடன் அல்லது ஒரு கட்டுப்படுத்தப்பட்ட நாட்டுடன் பணியாற்றக்கூடும் என நீங்கள் நம்பினால், உடனடியாக சட்டத்துறையைத் தொடர்பு கொள்ளவும்.



# உள்வணிகம்

சட்டமும், எங்களுடைய கொள்கைகளும் உள்வணிகத்தை கண்டிப்பாக தடைசெய்கிறது. கூப்பர் ஸ்டாண்டர்ட் குறித்தோ அல்லது எங்களுடைய வணிகப்பங்குதாரர் குறித்தோ பொதுமக்களுக்கு வெளியிடப்படாத ஏதேனும் ஒரு விஷயம் குறித்து நீங்கள் அறிந்து கொள்ளும் நேரங்களும் வரக்கூடும் மற்றும் அது நிறுவனத்தின் பங்குகளில் முதலீடு செய்வதற்கான முடிவுகளை எடுப்பதில் முக்கியமானதாகவும் இருக்கக்கூடும். அந்தத் தகவலின் அடிப்படையில் பங்குகளை வாங்குவதோ அல்லது விற்பதோ சட்டத்திற்குப் புறம்பானதாகும். அந்தத் தகவலின் அடிப்படையில் யாரேனும் ஒருவருக்கு உதவிக்குறிப்பை அளிப்பதும் சட்டத்திற்குப் புறம்பானதாகும்.

**நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:**

- உள்வணிகம் தொடர்பான சட்டங்களையும் எங்களுடைய கொள்கைகளையும் புரிந்துகொண்டு அது ஒவ்வொரு ஊழியருக்கும் எப்படி பொருந்துகிறது என்பதை நாங்கள் அறிந்துகொள்ள வேண்டும்.
- பொருள் சார்ந்த பொதுமக்களுக்கு வெளியிடப்படாத தகவலை வைத்துக் கொண்டிருக்கும் போது பங்குகளை வாங்கவோ அல்லது விற்கவோ கூடாது.
- பொருள் சார்ந்த, பொதுமக்களுக்கு வெளியிடப்படாத தகவலின் அடிப்படையில் பங்குகளை வாங்க அல்லது விற்க எவரையும் ஊக்கப்படுத்தவோ அல்லது எவருக்கும் உதவிக்குறிப்பை வழங்கவோ கூடாது.



## பொருள் சார்ந்த தகவல் என்றால் என்ன?

ஒரு நியாயமான முதலீட்டாளர் ஒரு பங்கை வாங்கவோ அல்லது விற்கவோ அல்லது தக்க வைக்கவோ முடிவுசெய்யும் போது அவர் முக்கியமானதாக கருதும் எந்த ஒரு தகவலும் பொருள் சார்ந்த தகவல் எனப்படும். இதில் பின்வரும் தகவல்கள் உள்ளடங்கும்:

- வருடத்திற்கான அல்லது காலாண்டிற்கான நிதிசார்ந்த முடிவுகள் மற்றும் எதிர்கால வருவாய் செயல்திறனுடன் தொடர்புடைய வழிகாட்டுதல்கள் அல்லது முன்கணிப்புகள் உள்ளிட்ட பிரசுரிக்கப்படாத வருவாய் தொடர்பான தகவல்கள்;
- விற்பனை அளவுகளில் ஏற்படும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள்;
- ஒரு குறிப்பிடத்தக்க நிலுவையிலுள்ள அல்லது முன்மொழியப்பட்டுள்ள ஒன்றிணைப்பு, கையகப்படுத்துதல், உரிமை துறப்பு அல்லது டெண்டர் சலுகை அல்லது கூட்டு முயற்சி;
- நிலுவையிலுள்ள அல்லது முன்மொழியப்பட்டுள்ள ஒரு குறிப்பிடத்தக்க சொத்தை வாங்குதல் அல்லது விற்பனை செய்தல்;
- குறிப்பிடத்தக்க தொழில்நுட்ப மேம்பாடுகள்;
- ஒரு முக்கிய வாடிக்கையாளரை அல்லது வழங்குநரை அல்லது தயாரிப்புத் திட்டத்தை பெறுதல் அல்லது இழத்தல்;
- செயல் தலைமையில் மாற்றங்கள்;
- குறிப்பிடத்தக்க வழக்கு சார்ந்த முன்னேற்றங்கள்;
- மறுசீரமைத்தல் அல்லது வேலை நீக்கங்கள்;
- தணிக்கையாளர்களை மாற்றுதல்; மற்றும்
- திட்டமிடப்பட்ட பங்கு பிரிப்புகள் அல்லது இலாபப் பங்குகள்.

சில தகவல்களின் பொருட்படுத்தக்கூடிய தன்மை தொடர்பான எந்தக் கேள்விகளுக்கும், தயவுசெய்து சட்டத்துறையுடன் கலந்தாலோசிக்கவும். கடனீட்டுப் பத்திரங்களின் வர்த்தகம் தொடர்பான கொள்கையையும் பார்க்கவும்.

# உலகளாவிய சமூகத்தில் நேர்மையே எங்களை இயக்குகிறது

- நற்பணி நன்கொடைகள்
- நமது சுற்றுப்புறங்களைப் பராமரித்தல்
- கட்டாயமாக வேலை வாங்குதல் மற்றும் நவீன அடிமைத்தனம்
- அரசியல் பங்கேற்பு



## நற்பணி நன்கொடைகள்

கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் சமூகத்தின் பங்குதாரராக இருப்பதே எங்களுடைய முக்கிய மதிப்பீடுகளில் ஒன்றாக விளங்குகிறது. நாங்கள் பணியாற்றும் மற்றும் வசிக்கும் இடங்களில் உள்ள சமூங்களுக்கு ஆதரவு அளிக்கும் எங்களுடைய விருப்பம் மற்றும் பொறுப்பு ஆகியவற்றால் நாங்கள் இயக்கப்படுகிறோம். ஒரு பொறுப்புள்ள பெருநிறுவனக் குடிமகனாக நாங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ள தொண்டு நிறுவனங்களுக்கு எங்களுடைய பவுண்டேஷன் மூலமாக எங்களுடைய பங்களிப்பை அளிக்கிறோம். கூப்பர் ஸ்டாண்டர்ட் பவுண்டேஷன் ஒரு மனித நேயக் குழுவாலும், அறங்காவலர்களின் குழுவாலும் நிர்வகிக்கப்படுகிறது.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- நற்பணி சார்ந்த பங்களிப்புகள் குறிப்பிட்ட கொள்முதல்களுக்கோ அல்லது பொறுப்புகளுக்கோ எந்தவகையிலும் தொடர்புடையவை அல்ல என்பதை உறுதி செய்ய வேண்டும்.
- அனைத்துப் பங்களிப்புகளும் நெறிமுறையாகவும், பொறுப்புணர்வுடனும் மேற்கொள்ளப்படுகின்றன என்பதை உறுதி செய்ய வேண்டும்.
- பங்களிப்புகள் நம்முடைய ஊழியர்கள் பணியாற்றும் மற்றும் வசிக்கும் சமூகங்களை வலுப்படுத்த, குறிப்பாக குழந்தைகளுக்கான நற்பணிகள், கல்வி, உடல்நலம் மற்றும் நலவாழ்வு மற்றும் சமூகத்திற்கு புத்துயிரூட்டுதல் போன்றவற்றை வலுப்படுத்த பயன்படுத்தப்படுகின்றன என்பதை உறுதி செய்ய வேண்டும்.

## நமது சுற்றுப்புறங்களைப் பராமரித்தல்

கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் நாங்கள் இணைந்து பணியாற்றும் குழுக்களுக்கு மட்டுமல்லாமல் நமது சமூகங்களுக்கும், இயற்கைச் சுற்றுச்சூழல்களுக்கும் மதிப்பளிக்கும் வகையில் எங்கள் நேர்மையானது எங்களை இயக்குகிறது.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- நமது பணிக்குப் பொருந்தக்கூடிய சுற்றுச்சூழல், உடல்நலம் மற்றும் பாதுகாப்பு தொடர்பான சட்டங்களை நாம் தெரிந்துகொண்டு அவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும்.
- நமது விற்பனையாளர்கள், வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் தங்களுடைய செயல்பாடுகளைப் பாதுகாப்பாகவும், பொறுப்புடனும் செய்கிறார்கள் என்பதையும் மற்றும் அவர்கள் வழங்குநர்களுக்கான நன்னடத்தைக் கோட்பாட்டைப் பின்பற்றுகிறார்கள் என்பதையும் உறுதி செய்யும் வகையில் நாம் பணியாற்ற வேண்டும். அவர்களுக்கு கல்வியையும், பயிற்சியையும் அளிப்பதன் மூலம் நாம் இதைச் செய்யக்கூடும்
- நமது தயாரிப்புகளில் உள்ள கனிமங்கள் பொறுப்புள்ள ஆதாரங்களில் இருந்து பெறப்படுகின்றன என்பதை உறுதி செய்யும் பொருட்டு தேவைக்கேற்றவாறு நியாயமான பூர்வீக நாடு குறித்த (RCOI) விசாரணைகளை மேற்கொள்ளவும்.
- சட்டங்கள் மற்றும் நம்முடைய உள்ளமைந்த கொள்கைகள் ஆகியவற்றைப் பின்பற்ற வேண்டும் - மற்றும் நமது சகபணியாளர்களும் இதைப் பின்பற்ற அவர்களுக்கு ஊக்கமளிக்க வேண்டும்.



## கட்டாயமாக வேலை வாங்குதல் மற்றும் நவீன அடிமைத்தனம்

கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் நாங்கள் எங்களுடைய வணிகத்திலும், எங்களுடைய வழங்கல் சங்கிலி முழுவதிலும் குழந்தைத் தொழிலாளர் மற்றும் ஆள் கடத்தல் உட்பட அனைத்து வடிவிலான கட்டாயமான வேலை வாங்குதலையும், நவீன அடிமைத்தனத்தையும் தடை செய்துள்ளோம்.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- எங்களுடைய அனைத்து வணிகப் பரிமாற்றங்களிலும் நாங்கள் நேர்மையுடன் நடந்துகொள்கிறோம் மற்றும் எங்களுடைய வணிகப் பரிமாற்றங்களுக்குள் அல்லது உறவுகளுக்குள் எந்த இடத்திலும் கட்டாயமாக வேலை வாங்குதல் நடைபெறவில்லை என்பதை உறுதி செய்யும் கொள்கைகளையும், கட்டுப்பாடுகளையும் நாங்கள் அமல்படுத்தியுள்ளோம்.
- சங்கம் ஏற்படுத்திக்கொள்வதற்கான சுதந்திரத்திற்கும், பொது கூட்டுப்பேரத்திற்கும் நாங்கள் ஆதரவு அளிக்கிறோம் மற்றும் எங்களுடைய வழங்குநர்களும் இதே ஆதரவை அளிக்க வேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கிறோம் .
- வழங்குநர்கள் மற்றும் வணிகப்பங்குதாரர்கள் ஆகியோருடன் நாங்கள் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளும் போது அனைத்து வகையான கட்டாய வேலை வாங்குதலையும் தடைசெய்யும் வார்த்தையை ஒப்பந்தத்தில் உள்ளடக்குவதை உறுதி செய்து கொள்கிறோம்.
- இந்த உறவுகளை கண்காணித்து அதில் ஏதேனும் ஒன்று தவறாக இருப்பதாக தோன்றினால் அது குறித்து பேசவும்.

## அரசியல் பங்கேற்பு

வாக்களிப்பதற்காக பதிவுசெய்து கொள்வதன் மூலமும், பிரச்சினைகள் குறித்த அறிவை வளர்த்துக் கொள்வதன் மூலமும் அரசியல் நடைமுறைகளில் பங்கேற்க எங்கள் ஊழியர்களை நாங்கள் ஊக்குவிக்கிறோம். அதே நேரத்தில் ஊழியர்கள் ஒவ்வொருவரும் தங்களுடைய அரசியல் செயல்பாடுகளை கூப்பர் ஸ்டாண்டர்ட்-ன் பணியில் இருந்து தனித்திருக்கும்படி வைத்திருக்க வேண்டும். ஆதரவு அளிப்பதன் மூலமும், பரப்புரையில் ஈடுபடுவதன் மூலமும் இந்நிறுவனம் அரசியல் செயல்முறைகளில் பங்கேற்கிறது மற்றும் பொருந்தக்கூடிய அனைத்து சட்டங்களையும் பின்பற்றுகிறது.

### நேர்மையும், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடும் நாம் பின்வருமாறு செயல்படவேண்டும் என வலியுறுத்துகிறது:

- நிறுவனத்தின் சார்பாக அரசியல் செயல்பாட்டிற்கு பொறுப்பேற்கும்பட்சத்தில் பெருநிறுவன தகவல் தொடர்புத் துறையின் அனுமதியைப் பெற வேண்டும் மற்றும் பரப்புரை தொடர்பான அனைத்து சட்டங்களையும், ஒழுங்குமுறைகளையும் கடைபிடிக்க வேண்டும்.
- கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் உங்கள் பணியிலிருந்து உங்களுடைய தனிப்பட்ட அரசியல் பங்கேற்பை தனியாக வைத்திருக்கவும் மற்றும் இது போன்ற காரணங்களுக்காக அரசியல் ஆதரவையோ அல்லது பங்களிப்புகளையோ நீங்கள் வேண்டிக் கேட்டுக்கொள்ளக் கூடாது.
- நிறுவனத்தின் நிதிகளையோ, வசதிகளையோ அல்லது வேறு எந்த சொத்துக்களையோ நிறுவனத்தால் அங்கீகரிக்கப்படாத வேட்பாளர்களை, கட்சிகளை, நிறுவனங்களை அல்லது பிற அரசியல் நோக்கங்களை ஆதரிக்க பயன்படுத்தக்கூடாது.



# நேர்மையே எங்களை **முன்னோக்கி** இயக்குகிறது

**கூப்பர் ஸ்டாண்டர்ட்-ல் ஒரு நிறுவனமாகவும், தனிநபர்களாகவும்- நமது வெற்றி நேர்மைக்கான நமது அர்ப்பணிப்பின் அடிப்படையில் அமைந்ததாகும். நாம் எப்படி வணிகத்தை மேற்கொள்கிறோம் என்பதையும், நாம் எப்படி நம்முடைய சகபணியாளர்களையும், வணிகப்பங்குதாரர்களையும் நடத்துகிறோம் என்பதையும் மற்றும் உலகெங்கிலும் மக்கள் நம்மை எப்படி பார்க்கிறார்கள் என்பதையும் இது வரையறுக்கிறது. இந்த நன்னடத்தைக் கோட்பாட்டைப் பின்பற்றுவதன் மூலமும், இந்த நன்னடத்தைக் கோட்பாட்டுடன் முரண்படும் நடத்தையை நீங்கள் பார்க்க நேர்ந்தால் அது குறித்து பேசுவதன் மூலமும் நீங்கள் உங்கள் பங்கை செய்யமுடியும்.**



# நெறிமுறை தொடர்பான அறிக்கை அளிக்கும் ஆதார அமைப்புகள்

ஓர் அறிக்கையை அளிக்கவும், கேள்விகளைக் கேட்கவும், ஒரு பிரச்சினையை வெளிப்படுத்தவும், எங்களுடைய நெறிமுறை தொடர்பான அறிக்கை அமைப்புகளில் ஒன்றைத் தொடர்பு கொள்ளவும்.

- உங்களுடைய மேற்பார்வையாளர் அல்லது மேலாளர்
- மனிதவளக் குழுவின் ஏதேனும் ஓர் உறுப்பினர்
- சட்டத்துறை அல்லது நெறிமுறை மற்றும் அதைக் கடைபிடித்தலுக்கான அலுவலகம் (ethicsandcompliance@cooperstandard.com)
- உலகளாவிய நெறிமுறை மற்றும் அதைக் கடைபிடித்தலுக்கான குழுவின் ஏதேனும் ஓர் உறுப்பினர் (www.CooperStardard.com/ethics)
- நீங்கள் விரும்பும் பட்சத்தில், அடையாளம் தெரியாமல்* www.CSIntegrityLine.com என்பதில் உள்ள கூப்பர் ஸ்டாண்டர்ட் இண்டக்ரிட்டிலைன்

** நாங்கள் செயல்படும் சில நாடுகளில் அடையாளமற்ற அறிக்கை அளித்தல் அனுமதிக்கப்படமாட்டாது என்பதைத் தயவுசெய்து குறித்துக்கொள்ளவும்.*

## எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாட்டைக் கடைபிடித்தல்

கூப்பர் ஸ்டாண்டர்ட் நிறுவனத்தில் நேர்மையே நம்மை இயக்குகிறது. எங்களுடைய முக்கிய மதிப்பீடுகள், எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாடு, நிறுவனக் கொள்கைகள் மற்றும் நாங்கள் வணிகத்தை நடத்தி வரும் நாடுகளின் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைகள் ஆகியவை எங்களுக்கு ஒரு போட்டி சார்ந்த அனுகூலமாக இருப்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம்.

நிறுவனத்தின் கொள்கையை அல்லது சட்டத்தை எந்த வகையிலும் மீறுவது தீவிரமான பின்விளைவுகளை ஏற்படுத்தக்கூடும். இதில் பணிநீக்கம் உட்பட ஒழுங்கு நடவடிக்கை மற்றும் சாத்தியமான உரிமையியல் மற்றும் குற்றவியல் பொறுப்புரிமை ஆகியவை உள்ளடங்குகின்றன. தவறான நடத்தைக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கையை எடுக்கும் உரிமையை எங்கள் நிறுவனத்திற்கு உள்ளது. இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்துவதற்கும், அதன் வழிகாட்டுதல்கள் குறித்து ஊழியர்கள் அறிந்திருப்பதையும், அவற்றைக் கடைபிடிப்பதையும் உறுதி செய்வதற்கும் அனைத்து அலுவலர்களும், மேலாளர்களும் பொறுப்பாவார்கள். இந்தக் கொள்கையை முழுமையாக கடைபிடிப்பதற்காக பொறுப்பு அனைத்து ஊழியர்களுக்கும், இயக்குநர்களுக்கும், முகவர்களுக்கும் உள்ளது. ஆலோசகர்கள், முகவர்கள், வழங்குநர்கள் மற்றும் வணிகப் பங்குதாரர்கள் உட்பட எங்கள் நிறுவனத்தின் சார்பாக பணியாற்றும் அனைவரும் எங்களுடைய நன்னடத்தைக் கோட்பாட்டைக் கடைபிடிக்க வேண்டும் எனவும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். இந்தக் கொள்கையின் விளக்கத்தை அளிப்பதற்கான இறுதிப் பொறுப்பு எங்களுடைய கடைபிடித்தலுக்கான தலைமை அலுவலருக்கு உள்ளது.